பக்கங்கள்:-26

# காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2057 | ஐப்பசி 26 | புதன்கிழமை | 12.11.2025 | அதிர்வு 105




## அடுத்தவருடமாவது வாக்குறுதிகளை நிறைவேற்றுங்கள்!

### அரசிடம் நாமல் வலியுறுத்து

“ஏழைகளுக்கு வரி விதித்து, செல்வந்தர்களுக்கு நிவாரணமளிக்கும் வகையில்தான் 2026 ஆம் ஆண்டுக்கான 04



# அரச எதிர்ப்புப் பேரணியில் மஹிந்த பங்கேற்கவே மாட்டார்

## அதற்கான இரு காரணங்களையும் பகிரங்கமாக முன்வைத்தார் அவர்

வரும் 21 ஆம் திகதி நுகேகொடையில் எதிர்க் கட்சிகளின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள அநுர அரசுக்கு எதிரான பேரணியில் தான் பங்கேற்கப்போவதில்லை என்று முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவருமான மஹிந்த ராஜபக்ஷ பகிரங்கமாகத் தெரிவித்துள்ளார்.

இந்த அரச எதிர்ப்புப் பேரணியில் தான் பங்கேற்காதமைக்கு இரண்டு காரணங்கள் உள்ளன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். 06

# இலவச சுகாதார அமைப்பு மிகவும் ஆபத்தான கட்டம்!

## மருந்தும் இல்லை, மருத்துவரும் இல்லை என்று அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

இலங்கையின் இலவச சுகாதார அமைப்பு கடும் நெருக்கடியைச் சந்தித்து வருகின்றது என்று அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஊழியர்கள்பற்றாக்குறை,மருந்துப் பற்றாக்குறை மற்றும் அத்தியாவசிய மருத்துவ உபகரணப் பற்றாக்குறை போன்ற நீண்டகாலப் பிரச்சினைகளுக்கு 2026 ஆம் 06







அண்மைக் காலத்தில் முகப் புத்தகங்களில் அதிகம் அடிபட்ட விவகாரம் ரெலோ இயக்கத்தின் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனின் குரலில் வெளியான சில ஒலிப்பதிவுத் துண்டுகளும், அவை வெளிப்படுத்திய சில தகவல்களும், அவற்றின் அடிப்படையில் அவரவர் மனங்களில் உருவான கருத்துகளும், முடிவுகளும், அதன் பின்னர் இடம்பெற்ற தற்கொலை என்று கூறப்படும் ஒரு மரணம் பற்றிய விடயமும், அதை ஒட்டிக் கட்டவிழந்த விவகாரங்களும், கதைகளும்தான்.

அவற்றைக் கோர்த்துக் கட்டி ஒரு செய்தியாக்குவதில் உள்ள சட்டச் சிக்கல் பலருக்கும் புரிவதில்லை. அநாமேதய பெயரிலான முகப் புத்தகங்களில், எத்தகைய அர்த்தங்களையும் கொடுத்து, செய்திகளை, தகவல்களை வெளியிடலாம். ஆனால் வட்ஸ் அப் மூலம் வந்த வெறும் குரல் ஒலிப்பதிவுகளை – அதுவும் துண்டு துண்டான ஒலிப் பதிவுகளை – வைத்துக்கொண்டு, விடயங்களைத் தொடர்பு படுத்தி 06

# யாழ்ப்பாணத்தில் இடம்பெயர்ந்துள்ள குடும்பத்துக்கும் நான்கு ஆண்டுகளுக்குள் வீடுகள் கட்டி முடிக்கப்படும்

## வீடமைப்பு பிரதியமைச்சர் டீ.பி.சரத் தெரிவிப்பு



யாழ்ப்பாணக் குடாநாட்டில் இடம் பெயர்ந்துள்ள ஒவ்வொரு குடும்பத்துக்கும் அடுத்த மூன்று முதல் நான்கு ஆண்டுகளுக்குள் வீடுகள் கட்டி முடிக்கப்படும் என வீடமைப்பு பிரதியமைச்சர் டீ.பி.சரத் தெரிவித்துள்ளார்.

2026 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவு திட்ட இரண்டாம் வாசிப்பு மீதான 3 ஆம் நாள் விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

2015 முதல் 2019 ஆம் ஆண்டு வரையிலான முந்தைய அரசாங்கத்தின் வீடமைப்புத் திட்டங்கள் கடுமையாக விமர்சித்த அவர், 64,407 வீடுகள் கட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்ட போதிலும், 1,647 வீடுகள் மட்டுமே கட்டி முடிக்கப்பட்டன என்று குறிப்பிட்டார்.

அவற்றில் பல வீடுகள் யானை தாக்கும் இடங்களிலும், தண்ணீர் மற்றும் வீதி வசதிகள் இல்லாத காட்டுப் பகுதிகளிலும் கட்டப்பட்டதால் மக்கள் குடியிருக்கவில்லை என்றும் குற்றம் சாட்டப்பட்டினார்.

இந்த முறை வரவு - செலவு திட்டம் தோட்ட சமூக மக்களுக்காக 2,500 வீடுகள் கட்ட 5.6 பில்லியன் ரூபாயும், கொழும்பு மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் அடுத்த மூன்று ஆண்டுகளுக்குள் 5,000 வீடுகளை நிர்மாணிக்க 15 பில்லியன் ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளது.

வடக்கு கிழக்கில் மோதல்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 2,445 வீடுகளை நிர்மாணிக்க இந்த ஆண்டு 3.8 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் வீடொன்றுக்கு தலா 15 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதுடன்,இது மற்ற பிரதேசங்களில் வழங்கப்படும் 10 லட்சம் ரூபா தொகையை விட அதிகமாகும்.

ஏனெனில் அங்கு கட்டுமானச் செலவுகள் கூடுதலாக உள்ளன.

மேலும், வடக்கில் முந்தைய ஆட்சியில் சுமார் 5,000 குடும்பங்கள் வீடுகளை இழந்து, தகரக் கொட்டகைகளில் தங்க வைக்கப்பட்டனர் அவர்களுக்கான வீடுகளுக்கு அத்திவாரம் மட்டுமே போடப்பட்டதாகவும் சுட்டிக்காட்டினார்.

இந்த ஆண்டு யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார் ஆகிய பிரதேசங்களில் 1,900- இற்கும் மேற்பட்ட வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ள நிலையில், அடுத்த 3-4 ஆண்டுகளுக்குள் யாழ்ப்பாண குடாநாட்டில் இடம்பெயர்ந்த ஒவ்வொரு குடும்பத்துக்கும் வீடுகளை கட்டி முடிக்கும் பணி நிறைவு செய்யப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# புதிய கடன்களால் இலங்கையை பாதாளத்தில் தள்ளும் அபாயம்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தெரிவிப்பு



தமது வரவு செலவு திட்டத்தில் தாமே கைதட்டிக் கொள்ளும் அரசாங்கமே தற்போது ஆட்சியில் இருப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ விமர்சனங்களை முன்வைத்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற வரவியமீதான இன்றைய மூன்றாம் நாள் விவாதத்தின் போது, உரையாற்றுகையிலேயே அவர் இந்த விமர்சனத்தை முன்வைத்தார்.

அத்துடன், முன்னதாக வாக்குறுதி அளித்ததற்கமைய, 35ஆயிரம் தொழில் கோரும் பட்டதாரிகளுக்கான தொழில் வாய்ப்புகள் தொடர்பில் இந்த பாதீட்டில் அரசாங்கம் எந்தவொரு விடயத்தையும் முன்வைக்கவில்லை எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றம் சாட்டினார்.

இதனிடையே, நாட்டில், 40 முதல் 50 சதவீதம் வரையான மக்கள் வறுமையினால் கஷ்டத்திற்கு உள்ளாவதாக ஆய்வுகள் கூறுவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

அத்துடன், தற்போதைய அரசாங்கம் சர்வதேச நாணய நிதியம் கூறுவதற்கு ஏற்றால்போல் தலை அசைப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதற்கமைய, 2026 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தை உருவாக்கியது ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அல்ல எனவும், சர்வதேச நாணய நிதியமே அதனை உருவாக்கியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும், பழைய கடன்களைச் செலுத்தாது புதிய கடன்களைப் பெறுவதன் மூலம் இந்த நாட்டை காலம் முழுவதும் பாதாளத்திற்குள் விழ வைக்கும் செயற்பாட்டை அரசாங்கம் முன்னெடுப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

கோட்டாபய பயணித்த அதே வழியிலேயே இந்த அரசாங்கமும் பயணிப்பதாகவும் சஜித் பிரேமதாஸ குற்றம் சுமத்தினார்.

அதேபோன்று நாட்டு மக்களை வரியால் நெரிக்கும் நிலைமை இன்றிருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

சர்வதேச நாணய நிதியத்தின் இலக்கு 15 சதவீதமே எனத் தெரிவித்த சஜித், அரசாங்கம் வரியின் மூலம் 15.9 சதவீதத்தை வருமானமாக ஈட்டிக் கொண்டுள்ளதாக சுட்டிக்காட்டினார்.



# புகழ்பெற்ற சிங்களப் பாடகி லதாவின் பிறந்தநாள் நிகழ்வில் சஜித் பங்கேற்பு!

புகழ்பெற்ற சிங்களப் பாடகி லதா வல்பொலவின் பிறந்தநாள் நிகழ்வில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ பங்கேற்றார்.

பல தசாப்தங்களாக சிங்களப் பாடல் உலகில் ராணி என மகுடம் சூடிய புகழ்பெற்ற பாடகியான கலாசூரி திருமதி லதா வல்பொலவின் 92 ஆவது பிறந்த நாள் நேற்றாகும். எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று காலை அவரின் இல்லத்துக்குச் சென்று நலம் விசாரித்து, அவரோடிணைந்து பிறந்த நாளைக் கொண்டாடினார்.

இந்த நிகழ்வில், ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சுஜீவ சேனசிங்க, ரோஹன பண்டார, ஹெக்டர் அப்புஹாமி, ஜெ.சி. அலவதுவல, திலிப் வெதாராச்சி, எம். தர்மசேன, கீங்ஸ் நெல்சன், சித்ரால் பெர்னாண்டோ, பீ. ஆரியவங்ச ஆகியோருடன் பாடகர்கள், பாடகிகள் மற்றும் திருமதி லதா வல்பொலவின் குடும்ப அங்கத்தவர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர்.






## வட மாகாண மரநடுகை மாதம் கார்த்திகை-2025

“பொருள்களின் உண்மையான இயல்புகளை நாம் சரியாகக் கருத்திற் கொண்டால் ஒவ்வொரு மரமும் தங்கத்தினாலோ வெள்ளியினாலோ ஆக்கப்பட்டிருப்பதை விட அது பச்சையாக இருப்பதே அதி உன்னதமானது”

- மார்ட்டின் லூதர் (ஜேர்மனிய கத்தோலிக்க மதகுரு)



## பட்ஜட் உருவாக்கத்தின் போது

# நாணய நிதியத்தின் பரிந்துரைகள் ஜனாதிபதி அநுரவால் நிராகரிப்பு!

## அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவிப்பு



2026ஆம் ஆண்டுக்கான பட்ஜட் தொடர்பில், சர்வதேச நாணய நிதியத்தால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகள் சில வற்றை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நிராகரித்தார் என்று அமைச்சர் வசந்த சமரசிங்க வெளிப்படுத்தியுள்ளார்.

பட்ஜட் தொடர்பான நாடாளுமன்ற விவாதங்கள் தற்போது இடம்பெற்று வருகின்றன. அமைச்சர் வசந்த சமரசிங்க மேலும் தெரிவித்ததாவது:-

"2026ஆம் ஆண்டுக்கான பட்ஜட்டைத் தயாரிக்கும்போது சில நிபந்தனைகளை சர்வதேச நாணய நிதியம் முன்வைத் தது. ஆனால், அவற்றில் பொருந்ததாத விடயங்களை ஜனாதி பதி அநுரகுமார திஸாநாயக்க நிராகரித்தார்.

சொத்துக்கள் மீதான வரியை அடுத்த வருடத்தில் இருந்து நடைமுறைப்படுத்துமாறு நாணய நிதியம் கோரியது. ஆனால், அந்தப் பரிந்துரை ஜனாதிபதியால் நிராகரிக்கப்பட்டது. சொத்துக் கள் மீதான வரி 2027ஆம் ஆண்டுமுதல் நடைமுறைக்கு வரும் என்று நாணய நிதியத்திடம் ஜனாதிபதி தெரிவித்தார்.

அதுபோல் அரச அலுவலர்களின் ஊதிய உயர்வு முன்மொழிவையும் ஜனாதிபதி அநுர நிராகரித்தார். இது பணவீக்கத்தை விடவும் குறைவான தொகையை அதிகரித் தால் போதும் என்பது நாணய நிதியத்தின் முன்மொழிவாக இருந்தது. ஆனால், பணவீக்கத்தை விடவும் அதிக தொகை வழங்கப்பட வேண்டும் என்ற அடிப்படையில் அந்தப் பரிந் துரை நிராகரிக்கப்பட்டது." - என்றார்.

---

### அடுத்த வருடமாவது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வரவு - செலவுத் திட்டம் தயாரிக்கப் பட்டுள்ளது. பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்கும், நாட்டு மக்களுக்கு நிவாரணமளிப்பதற்கும் நாங்கள் முழு மையான ஒத்துழைப்பு வழங்கு வோம். அடுத்த ஆண்டாவது மக் களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை 50 சதவீதமளவிலேனும் நிறைவேற் றுங்கள்."

- இவ்வாறு அரசிடம் வலியுறுத்தி னார் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜ பக்ஷ.

நாடாளுமன்றத்தில் நேற்று செவ் வாய்க்கிழமை நடைபெற்ற 2026 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான மூன்றாம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையி லேயே அவர் மேற்கண்டவாறு குறிப் பிட்டார்.

அங்கு அவர் மேலும் உரையாற்று கையில்,

"ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க வரவு - செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்து சுமார் 4.30 மணித்தியால வரலாற்றுச் சாதனையான உரையை நிகழ்த்தி னார் என்று ஆளும் தரப்பினர் குறிப்பிடு கின்றனர்.

இந்த வரவு - செலவுத் திட்டத் தில் வரலாற்று சாதனை மிக்க என்ன விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன என்பதை ஆழமாக ஆராய வேண் டும்.

2025 ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தின் முன்மொழிவுகள் 50 சத வீதமேனும் நிறைவேற்றப்படவில்லை. கடந்த கால வரவு - செலவுத் திட்டங்க ளில் செல்வந்தர்களிடமிருந்து பெற்று, ஏழைகளுக்கு நிவாரணமளிக்கப்பட்டது. ஆனால், இந்த வரவு - செலவுத் திட்டம் ஏழைகளிடமிருந்து பெற்று செல்வந் தர்களுக்கு வழங்கும் போக்கில் காணப் படுகின்றது.

பொருளாதார மீட்சிக்குரிய நடவடிக் கைகளை மேற்கொள்ளுங்கள். நாங்கள் எதற்கும் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. கடந்த அரசுகள் மேற்கொண்ட நடவ டிக்கைகள் மற்றும் திட்டங்க ளுக்கு மக்கள்தான் எதிர்ப்புத் தெரிவித் தது.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க கடந்த காலங்களில் நாடாளுமன்றத்தில் பேசிய விடயங்களைக் ஹன்சாட்டில் இருந்து தொகுத்து நூலாக வெளியிட வேண்டும்.

பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்கும், நாட்டு மக்களுக்கு நிவாரணமளிப்பதற்கும் நாங்கள் முழு மையான ஒத்துழைப்பு வழங்கு வோம்.

உங்களைப் போன்று வைராக்கியத் துடன் நாங்கள் செயற்படப் போவதில்லை. அடுத்த ஆண்டாவது மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை 50 சதவீதமளவி லேனும் நிறைவேற்றுங்கள்." - என் றார்.




# பல கட்சி முறைமையை நாசமாக்கிய எதிரணிகள்

## சபையில் பிரதமர் ஹரிணி சாடல்



“எதிரணிகளின் ஒன்றிணைவுதான் பல கட்சி முறைமைக்கு அச்சுறுத்தலாக மாறியுள்ளது. மாறாக எதிரணியை ஆளுங் கட்சி குறிவைக்கவில்லை. அதற்கு எமக்கு நேரமும் கிடையாது.” – என்று பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நடைபெற்ற வரவு– செலவுத் திட்ட விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

“பல கட்சி முறைமை மற்றும் ஜனநாயகத்துக்கு அச்சுறுத்தல் என எதிரணி தரப்பில் இருந்து குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. ஜனநாயகத்துக்கு எங்கு, எவ்வாறு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என்பதை எதிரணி விளக்கினால் நல்லது.

தராதரம் பராது சட்டத்தை உரிய வகையில் செயற்படுத்துவதற்குப் பெயர்தான் ஜனநாயகத்துக்கு அச்சுறுத்தல் என்பதா?

பல கட்சி ஆட்சி முறைமைக்கு அச்சுறுத்தலாம். எதிரணியில் உள்ள பல கட்சிகள் ஒன்றிணைவதுதான் பல கட்சி முறைமைக்கு அச்சுறுத்தலாகும். எனவே, பல கட்சி முறைமையை எதிரணிதான் நாசமாக்கியுள்ளது. தமது கட்சியை பாதுகாத்து அதனை வலுப்படுத்துவதற்கு எதிரணிகளால் முடியாமல்போயுள்ளது.

நிலைமை இவ்வாறு இருக்க ஆளுங்கட்சியை குறை கூறுவது ஏற்புடையது அல்ல. நாம் எதிரணியைக் குறி வைக்கவில்லை. அதற்கு நேரமும் கிடையாது. ஏனெனில் மக்களுக்கான சேவையே எமக்கு முக்கியம்..” – என்றார்.

# பத்து வருடங்களுக்குப் பிறகு தாய் வீடு சென்ற நாமல் எம்.பி.



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளரான நாமல் ராஜபக்ஷ எம்.பி. சுமார் 10 வருடங்களுக்குப் பின்னர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைமையகத்துக்கு நேற்று முன்தினம் சென்றிருந்தார்.

நுகேகொடையில் எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள போராட்டம் தொடர்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் கலந்துரையாடுவதற்காகவே நாமல் உள்ளிட்ட ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியினர் இவ்வாறு சு.க.வின் தலைமையகம் சென்றிருந்தனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஸ்தாபக உறுப்பினர்களில் ஒருவர்தான் மஹிந்த ராஜபக்ஷவின் தந்தையான டீ.ஏ. ராஜபக்ஷ, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஊடாகவே ராஜபக்ஷக்களின் அரசியல் பயணம் தென்னிலங்கையில் கோலோச்சியது.

மஹிந்த ராஜபக்ஷ, பஸில் ராஜபக்ஷ, சமல் ராஜபக்ஷ, நிருபமா ராஜபக்ஷ, நாமல் ராஜபக்ஷ உள்ளிட்ட ராஜபக்ஷ குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் சு.க. ஊடாகவே நாடாளுமன்றம் பிரவேசித்தனர்.

எனினும், 2015 இல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் பொதுவேட்பாளராகக் களமிறங்கிய மைத்திரிபால சிறிசேன வெற்றி பெற்ற பின்னர், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைப் பதவி மைத்திரி வசமானது. அதன்பின்னர் ராஜபக்ஷக்கள் இணைந்து புதிய கட்சியை ஆரம்பித்தனர்.

சுமார் 10 வருடங்கள் அவர்கள் சு.க வின் தலைமையகம் செல்லவில்லை. இந்நிலையிலேயே நேற்றுமுன்தினம் நாமல் ராஜபக்ஷ சென்றிருந்தார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

செய்தியாக்கி எழுதுவதும், அவை தொடர்பான விடயம் நீதிமன்றத்துக்கு சென்றால் எழுதியவற்றை சட்டரீதியாக உறுதிப்படுத்தி, நிலை நாட்டுவதும் மிகவும் நெருக்கடியானவை.

இன்று வரை அதே செல்வம் அடைக்கலநாதனுடன் அரசியல் ரீதியாக ஒரே கூட்டில் இருக்கும் ஒரு தமிழ் பிரமுகர் – நான் அறிந்தவரை அவரும் சட்டமாணி பரீட்சையில் சித்தி அடைந்தவர், சட்டம் நன்கு தெரிந்தவர் என்று நினைக்கிறேன் – அவரும் கூட இது விடயத்தில் பொறுப்புள்ள ஊடகங்கள் செய்தி வெளியிடவில்லை என்று குற்றம் சுமத்தி இருந்தார். ஆனால் தமது கூட்டணியின் சகாவைக் கண்டிக்கும் பகிரங்க அறிக்கை ஒன்றை அவர் கூட வெளியிடவில்லை. ஊடகங்கள் அப்பட்டமாக செய்தி வெளியிட்டிருந்தால் அதன் பின்னர் அதை மேற்கோள்காட்டி கண்டன அறிக்கை வெளியிட்டிருப்பாரோ என்னவோ...?

அப்படி ஊடகங்கள் மீது முகப் புத்தகம் ஊடாகக் குற்றம் சுமத்தும் அவர், வெளியான தகவல்களை வைத்துக் கொண்டு இந்த விடயத்தை – கிசுகிசு செய்தியாக இல்லாமல் – நேரடியான ஒரு செய்தியாக எப்படி எழுதலாம் என்பதை – அவர் சட்டம் படித்தவர் என்ற முறையில் சொல்லித் தந்திருந்தால் அதை நாங்கள் பிரசித்து இருக்கலாம் என்று நினைக்கிறேன்.

இப்போதும் கூட, இந்த விடயத்தை ஒட்டி ஒருவர் குற்றப் புலனாய்வுத்துறைக்கு நேரடியாக போய் முறைப்பாடு செய்திருக்கிறார் என்று வெளியில் வந்து நின்று ஊடகப் பேட்டி அளித்து இருக்கிறார். நல்லது. அவர் முறைப்பாடு செய்தமை போன்ற கிரிமினல் குற்றம் இடம்பெற்றது என்ற அடிப்படையில் புலன் விசாரணைகளை ஆரம்பித்து, விடயம் முன் நகர்ந்தால், அவற்றையே ஆதாரமாகப் பெற்று நாங்கள் விவரமாகச் செய்திகள் வெளியிட முடியும் என்று நினைக்கிறேன்.

புலனாய்வு விசாரணை ஒன்று நடைபெற்று, கிரிமினல் குற்றம் இழைக்கப்பட்டமைக்கான காத்திரமான விடயங்கள் வெளிவருமானால், அது குறித்து வெளியில் இருந்து ஒருவர் வந்து முறைப்பாடு செய்யப்படும் வரை – பரவலாகப் பேசப்பட்ட இந்த விவகாரம் குறித்து – பூர்வாங்க விசாரணைகளை நடத்தாமல் இருந்தமைக்கான கேள்விகளுக்குப் பொலிஸ் தரப்பும் கூட பதில் கூற வேண்டியிருக்கும்.

ஆனால், அதற்கு முன்னர் இந்த விடயங்களை ஒட்டி முகப்புத்தகத்தில் பதிந்த சிலருக்கு எதிராக செல்வம் அடைக்கலநாதன் செய்த முறைப்பாட்டை அடுத்து சிலருடைய முகப்புத்தகக் கணக்குகள் நிறுத்தப்பட்டு இருப்பதாக தெரிய வந்தது. ஓரிருவர் நேரடியாக செல்வத்துடன் தொடர்பு கொண்டு சமாளித்து விட்டார்கள் என்றும் ஒரு தகவல்.

அதேசமயம் ஊடகம் ஒன்றில் பச்சையாக செல்வம் மீது குற்றம் சுமத்தி அப்பட்டமாக பேசிய முன்னாள் ரெலோ பிரமுகர் விந்தன் கனகரத்தினத்துக்கு (நடராஜா பெஞ்சமின் கனகரத்தினத்துக்கு) எதிராக செல்வம் ஐந்து கோடி ரூபா மான நஷ்டம் கேட்டு சட்டத்தரணி நோட்டீஸ் அனுப்பி இருக்கிறார் என்று செய்தி வெளியாகி உள்ளது. 14 நாள்கள் முன்னறிவித்தல் கொடுக்கப்பட்டுள்ளது. பதில் இல்லாவிட்டால் வழக்குத் தொடருவாராம் செல்வம்.

மான நஷ்ட வழக்கு விடயத்தில் விந்தன் கொஞ்சம் கவனத்தோடு நடந்து கொள்வது அவருக்கு நல்லது. ஏற்கனவே ரெலோவின் ஊடகப் பேச்சாளர் சுரேன் குருசாமிக்கு எதிராக கடந்த பொதுத் தேர்தல் சமயத்தில் தாறுமாறாகக் குற்றங்களை அடுக்கி அவர் அளித்த பேட்டி விவகாரம் நீதிமன்றின் முன்னால் மானநஷ்ட வழக்காக உருவெடுத்து நிற்கின்றது. நீதிமன்ற அழைப்பாணை தமக்குக் கிடைக்கவில்லை என்று அவர் வெளியே கூறி வருகின்ற பின்னணியில், அவர் பிரசன்னமாகாத நிலையில் வழக்கை ஒரு தரப்புப் பிரசன்னத்துடன் விசாரித்து வரும் நீதிமன்றம் வரும் 24ஆம் அளவில் விசாரணையின் பின்னரான தீர்ப்பை அளிக்க இருப்பதாக தெரிகிறது. அந்த வழக்கிலும் சுரேன் குருசாமி 5 கோடி ரூபா மான நஷ்டம் கோரியிருந்தார். ஒரு பக்கத்துடன் மட்டுமே வழக்கு விசாரிக்கப்படுகின்றமையால் இந்தத் தொகைக்கான தீர்ப்பு வழங்கப்படுவதற்கான வாய்ப்புகள் உண்டு.

சம்பந்தப்பட்டவருக்கு எதிராக நீதிமன்றத் தீர்ப்பு அப்படி வரும் என்றால், அந்தப் பேட்டியை வெளியிட்ட ஊடகத்துக்கும் அதன் பின்னர் நெருக்கடி வரக்கூடிய வாய்ப்புகள் உண்டு. அதேபோல இப்போதும் செல்வத்தினுடைய விடயத்திலும் அதை ஒட்டி விந்தனின் பேட்டியை அப்படியே பிரசுரித்த ஊடகத்துக்கும் பின்னாளில் நெருக்கடி வரக்கூடும்.

நீதிமன்ற சவால்கள் வந்தால் அவற்றை சமாளிப்போம், வெட்டிப் பிடுங்குவோம் என்று ஊடகங்களில் பேசுவது வழமை. நானும் பேசுவதுண்டு. ஆனால் யதார்த்தத்தில் அவற்றை எதிர்கொள்வது என்பது வழமையான ஊடகப் பணியை பாதிப்புக்கு உள்ளாக்கும் நெருக்கடியாக இருக்கும். அதனால் ஊடகவியலாளர்களும், ஊடகங்களும் சற்றுக் கவனமாக – முன்னெச்சரிக்கையாக – நடந்து கொள்வது நல்லது.

அரசியல்வாதிகள் மற்றும் பிரமுகர்களின் திருகுதாளங்களை அம்பலப்படுத்துகின்றோம் என்ற பெயரில் எங்களை நாங்களே சிக்கலில்மாட்டிக் கொள்ள முடியாது. போதிய ஆதாரங்கள், உறுதியான சான்றுகள், ஆவணங்கள் இல்லாமல் முடிவுகளை தீர்மானித்து நாங்கள் எழுதினால் அவற்றை நிரூபிக்கும் பொறுப்பு எங்கள் களத்துக்குள் விழும்போதுதான் எங்களுக்கு நெருக்கடியின் ஆழம் புரியத் தொடங்கும்.

ஊடகவியலாளர்கள் மீதும் ஊடகங்கள் மீது குற்றம் சுமத்துபவர்களுக்கு ஊடகப் பணியில் உள்ள சட்ட மற்றும் தார்மீக ரீதியான நெருக்கடிகள், பொறுப்புகள், கடப்பாடுகள் பல சமயங்களில் புரிவதில்லை. எடுத்ததற்கு எல்லாம் ஊடகங்களை குற்றம் சுமத்துவது சின்ன விடயம்தான். ஆனால் ஊடகங்களின் சட்ட, தார்மீக கடப்பாடுகள், பொறுப்புக் கூறல் போன்றவற்றை புறம் ஒதுக்கி அவை செயற்பட முடியாது – செயற்படக் கூடாது.

## அரச எதிர்ப்புப்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தங்காலையில் தினமும் என்னைப் பார்க்க வரும் மக்களைத் தவறவிட முடியாது என்பதாலும், தங்காலையில் இருந்து நுகேகொடை வரை பயணம் செய்வதில் கூடுதல் நேரத்தைச் செலவிட வேண்டியிருப்பதாலும் நுகேகொடையில் நடைபெறவுள்ள அரச எதிர்ப்பு பேரணியில் நான் பங்கேற்கமாட்டேன்.

இருப்பினும், அரசுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் ஏற்பாடு செய்துள்ள பேரணியில் எனக்கு எந்த வெறுப்பும் இல்லை. இந்தப் பேரணியை நினைத்து நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

இந்த நிகழ்வில் நான் பங்கேற்காதது சிலரால் தவறாகப் புரிந்துகொள்ளப்படலாம்." – என்றார்.

எனினும், எதிர்வரும் 21 ஆம் திகதி நுகேகொடையில் நடைபெறவுள்ள அரச எதிர்ப்புப் பேரணியில் மக்களைத் திரட்டும் நோக்கில், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ எம்.பி. நேற்றுமுன்தினம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் ஒரு கலந்துரையாடலை நடத்தினார்.

இந்தக் கூட்டத்துக்குப் பிறகு ஊடகங்களிடம் பேசிய நாமல் ராஜபக்ஷ எம்.பி., எதிர்க்கட்சிகளால் நுகேகொடையில் நடத்தப்படும் அரச எதிர்ப்புப் பேரணியில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி முக்கிய பங்கு வகிக்கும் என்று கூறியிருந்தார்.

நடைபெறவுள்ள அரச எதிர்ப்புப் பேரணியை வெற்றிகரமாக்கவும், கட்சி உறுப்பினர்களை ஒன்றிணைக்கத் தேவையான வேலைத்திட்டம் குறித்து விவாதிக்கவும் தான் சு.கவின் தலைமையகத்துக்கு வந்தார் என்றும் நாமல் எம்.பி. மேலும் தெரிவித்திருந்தார்.

## இலவச சுகாதார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில் தீர்வு காண அரசு தவறிவிட்டது என்று அந்தச் சங்கம் குற்றம் சாட்டியுள்ளது.

இதன்படி நேற்று நடைபெற்ற அவசர மத்தியக் குழுக் கூட்டத்துக்குப் பின்னர் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில்,

"தற்போதைய நிலை மிகவும் ஆபத்தான கட்டத்தை எட்டியுள்ளது. வைத்தியசாலைகள் நோயாளர்கள் பராமரிப்பைத் தொடர்ந்து நடத்துவதில் கடுமையாகப் போராடி வருகின்றன.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ மற்றும் பொருளாதார செயலாளர் உள்ளிட்ட உயர் அதிகாரிகளுக்குச் சுகாதாரத்துறையை வலுப்படுத்த ஒரு நிலையான திட்டம் அவசியம் என்பதைக் கடந்த காலத்தில் பலமுறை அறிவித்திருந்தாலும், இதுவரை எந்தவொரு அர்த்தமுள்ள கலந்துரையாடலும் நடைபெறவில்லை.

அரசு பொருளாதார மீட்சியைப் பற்றி உரைகள் நிகழ்த்திக் கொண்டிருந்த போதிலும், 2026 வரவு – செலவுத் திட்டத்தில் பொதுச் சுகாதார அமைப்பைப் பாதுகாப்பதற்கான தெளிவான திட்டம் இல்லை.

மருந்து மற்றும் மருத்துவப் பொருட்களுக்காகப் பெரிய ஒதுக்கீடுகள் செய்யப்பட்டிருந்தாலும், தரமான மருந்துகளின் தொடர்ச்சியான விநியோகத்தை உறுதிப்படுத்த ஒரு திட்டவட்டமான திட்டம் இல்லை.

நாட்டில் மருத்துவ நிபுணர்களைத் தக்கவைத்துக்கொள்ளவோ அல்லது அரசு சுகாதாரத்துறையில் தொடர்ந்து பணியாற்றுவோரை ஊக்குவிக்கவோ நடவடிக்கைகள் எதுவும் இல்லை.

நெருக்கடியின் போது அர்ப்பணிப்புடன் இருந்த மருத்துவர்கள் மற்றும் நிபுணர்கள் எதிர்கொள்ளும் கஷ்டங்களைப் புறக்கணிப்பது வரலாற்றுப் பிழையாகும்." – என்றுள்ளது.

# ஆளும் கட்சி காட்டுச் செடிகளாகி எதிரணி தங்கச் செடிகளாக மாறும்

## இப்படிச் சொல்கின்றார் சாமர சம்பத் எம்.பி.



“எதிர்க்கட்சியினர் காட்டுச் செடிகளாகவும், ஆளும் கட்சியினர் தங்கச் செடிகளாகவும் இப்போது காணப்பட்டாலும் இன்னும் சிறிது காலத்தில் ஆளும் கட்சியினர் காட்டுச் செடிகளாகி, எதிர்க் கட்சியினர் தங்கச் செடிகளாக மாறும் நிலை ஏற்படலாம்.”

– இவ்வாறு புதிய ஜனநாயக முன்னணியின் எம்.பி சாமர சம்பத் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற வரவு – செலவுத் திட்ட விவாதத்தில் உரையாற்றும் போதே சாமர சம்பத் எம்.பி. இவ்வாறு தெரிவித்தார்.

விவாதத்தில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

“முழு நாடும் ஒன்றாக என்று போதைப்பொருளுக்கு எதிரான வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு இரண்டு நாட்களில் பேலியகொட மாநகர சபை உறுப்பினரின் கணவர் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டார்.

அதேவேளை ஒரு மாதத்திற்கு முன்னர் தெஹிவளை- கல்கிஸை நகர சபையின் ஆளும் கட்சி உறுப்பினர் ஒருவரின் மகன் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டிருந்தார்.

இவ்வாறான நிலைமையில் போதைப்பொருள் குற்றவாளிகளின் புகைப்படங்களை ஊடகங்களில் வெளியிட வேண்டாம் என்று பொலிஸ் மா அதிபர் தெரிவித்துள்ளார். இப்போதுதான் அவருக்கு அது தெரிகின்றதா? இதற்கு முன்னர் வெளிநாட்டிலிருந்து செவ்வந்தி உள்ளிட்ட திட்டமிட்ட குற்றச்செயல் கும்பலை சேர்ந்தவர்களை அழைத்து வரும் போது புகைப்படங்களை வெளியிட்டு பொலிஸாரே பிரசாரங்களை செய்தனர். அதன் பின்னரே பொலிஸ்மா அதிபருக்கு இப்போது அது நினைவுக்கு வந்துள்ளது.

கடந்த வரவு – செலவுத் திட்டத்தில் முன்னேற்றமடைந்துள்ள நிறுவனமாக ஸ்ரீலங்கன் விமான சேவை உள்ளது. அதற்காக ரூ. 20,000 மில்லியன் வழங்கப்பட்டது. இப்படி நிதி வழங்கினால் அது முன்னேற்றம் காணாமல் இருக்குமா? நாட்டில் 14500 கிராம சேவகர் பிரிவுகள் உள்ளன. ஸ்ரீலங்கன் விமான சேவைக்கு வழங்கிய பணத்தை பிரித்து பார்த்தால் ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவுக்கும் ரூ. 17 இலட்சம் என்ற அடிப்படையில் நிதியை வழங்கியிருக்கலாம். அதேவேளை பிணையின்றி கடன் வழங்குவதாக ஜனாதிபதி கூறியுள்ளார். ஆனால் எவருக்காவது பிணையின்றி கடன் கிடைத்துள்ளதா? என பார்த்தால் அப்படிக் கிடைக்கவில்லை.

மைத்திரிபால சிறிசேன பொலனறுவையைச் சேர்ந்தவர். அவர் அந்த மாவட்டத்தை அபிவிருத்தி செய்துள்ளார். அதேபோன்று மஹிந்த ராஜபக்ஷவும் அம்பாந்தோட்டையை அபிவிருத்தி செய்துள்ளார். அத்துடன் கோட்டாபய ராஜபக்ஷ கொழும்பை அபிவிருத்தி செய்துள்ளார்.

நீங்கள் நாளுக்கு நாள் பிரச்சினைகளை ஏற்படுத்திக்கொள்ள வேண்டாம். மக்கள் வீதிக்கு இறங்கும் நிலைமை வரும். உங்களுக்கு அதிகளவில் மக்கள் வாக்களித்தனர். ஒவ்வொரு மாவட்டத்திலும் இலட்சக்கணக்கில் மக்கள் வாக்குகளை வழங்கினர். நீங்கள் அந்த சாதனைகளை உடைத்துக் கொள்ள வேண்டாம். நிமல் சிறிபால டி சில்வா போன்றோர் உங்களைப் போன்று சாதனை வாக்குகளைப் பெற்றனர். இப்போது வீட்டில் இருக்கின்றார்.

இதுபோன்ற நிலைமை உங்களுக்கும். இப்போது நாங்கள் காட்டுச் செடிகள், நீங்கள் தங்கச் செடிகள். ஆனால், இன்னும் சிறிது காலத்தில் நீங்கள் காட்டுச் செடிகளாகி, நாங்கள் தங்கச் செடிகளாகி விடுவோம்.” – என்றார்.



## ‘தமிழ் மக்களின் எதிர்பார்ப்பும் பொறுப்புக்கூறலும்’ கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் தனபாலசிங்கம் உரை

கொழும்பு தமிழ்ச்சங்கத்தில் இன்று புதன்கிழமை மாலை 5.30 மணிக்கு அறிவோர் ஒன்றுகூடல் நிகழ்வில் “எதிர்கால நோக்கில் தமிழ் மக்களின் எதிர்பார்ப்பும் பொறுப்புக்கூறலும்“ என்ற தொனிப் பொருளில் பத்திரிகையாளர் வீரகத்தி தனபாலசிங்கம் உரைநிகழ்த்துகிறார். தமிழ்ச் சங்கத்தின் இலக்கியக்குழுவின் செயலாளர் தெட்சணாமூர்த்தி மதுசூதனன் தலைமையில் இந்த நிகழ்வு விநோதன் மண்டபத்தில் இடம்பெறும்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# பரவணிப் பண்பியல்பு

தேசிய இனப் பிரச்சினையின் விளைவாக உருவான யுத்தம் முடிவடைந்து 16 ஆண்டுகளாகிவிட்டன. ஆயினும், இனப் பிரச்சினைக்கு நீதி, நியாயமான - நின்று, நிலைத்து, நீடிக்க கூடிய - கௌரவமான - தீர்வு ஒன்றைக் காணும் முயற்சியில் இலங்கை சற்றேனும் முன்நகரவில்லை.

புரிந்துணர்வு, நல்லிணக்கம், மோசமான விடயங்கள் மீளநிகழாமை என்பவை பற்றி எல்லாம் அதிகம் பேசப்பட்டாலும், அத்திசையில் முன்நகர்வு இருப்பதாகத் தெரியவில்லை.

எனினும், தென்னிலங்கை தன்னுடைய அதிகாரத்தையும் வலிமையையும் மேலாதிக்கத்தையும் உறுதிப்படுத்தும் - பலப்படுத்தும் - நடவடிக்கைகளை மட்டும் தொடர்ந்தும் மிகத் தீவிரமாக மேற்கொண்டு வருகிறது.

தென்னிலங்கையின் பௌத்த - சிங்கள மேலாதிக்க சிந்தனைப் போக்கும், மேலாண்மை வெறித்தன நடவடிக்கைகளுமே தேசிய இனப் பிரச்சினையை இவ்வளவு தூரம் மோசமான கட்டத்துக்குக் கொண்டு வந்து நிறுத்தி இருக்கின்றன என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.


அந்த மேலாதிக்க - மேலாண்மை வெறித்தன - சிந்தனை போக்கிலிருந்து சிங்களத்தின் மூளைமையம் வெளியே வரும் வரை நாட்டின் தேசிய இனப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு கிடைப்பதற்கான வாய்ப்புகள் இல்லை. ஆயினும், தொடர்ந்து அந்த மேலாண்மை சிந்தனைகளின் வெளிப்பாடான நடவடிக்கைகளையே தென்னிலங்கை பௌத்த - சிங்கள ஆட்சி பீடம் மிக மும்முரமாக முன்னெடுத்து வருகின்றது.

அதன் பெறுபேறுகளைத்தான் - போக்குகளைத்தான் - வேறு வாசகங்களில் இலங்கைத் தமிழரசு கட்சியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் சத்தியலிங்கம் நாடாளுமன்றத்தில் சுட்டிக் காட்டி இருக்கிறார்.

''சமர்ப்பிக்கப்பட்டுள்ள இந்த வரவு - செலவுத் திட்டத்தில் கல்வி, விவசாயம், காணி, நீர்ப் பாசனம் உள்ளிட்ட அமைச்சுகளுக்கு பெரிய தொகைகள் ஒதுக்கப்படவில்லை. ஆனால் போர் முடிவடைந்து 16 வருடங்கள் கடந்தும் பாதுகாப்பு அமைச்சுக்கு மிகவும் பெரிய தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. அதாவது 455 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

''இது மொத்த வரவு செலவுத் திட்டத்தில் 10.26 வீதமாகும். இந்த ஒதுக்கீட்டை எந்தளவில் நியாயப்படுத்த முடியும்? இந்த பாரிய ஒதுக்கீடு இந்த நாட்டில் சமாதானத்தையோ, நாட்டின் பொருளாதார அபிவிருத்தியையோ ஏற்படுத்த எந்த வகையிலும் பங்களிக்கப் போவதில்லை.'' - இவ்வாறு அவர் சுட்டிக் காட்டியிருக்கின்றார்.

தென்னிலங்கையில் அதிகாரத்தை கைப்பற்றும் பௌத்த - சிங்கள இனவாத ஆட்சி பீடங்களுக்கு நாட்டின் சமாதானமோ, பொருளாதார அபிவிருத்தியோ, சுபீட்சமோ, நல்லிணக்க வாழ்வியலோ முக்கியமல்ல. அவற்றிற்கும் அப்பால் சிறுபான்மையினரை அடக்கி, ஒடுக்கி, மேலாதிக்கம் செய்யும் பேரினவாத மேலாண்மைப் போக்கை மேலும் வலிமையாக நிலை நிறுத்துவது ஒன்றே அவற்றின் முதல் - தனி - இலக்காகும். அத்தகைய ஆட்சி பீடங்கள் அதை நிலை நிறுத்துவதற்காக தம்முடைய படைகளுக்கும் பொலிஸுக்கும்தான் பெரும் தொகை நிதியை ஒதுக்கும். இதுதான் தெற்கின் பரவணிப் பழக்கம். பண்பியல்பு. அது மாற்ற முடியாதது.




# காரைதீவு கலைஞர் மோகனின் 38 ஆவது இசைத்தட்டு வெளியீடு

(வி.ரி.சகாதேவராஜா)

அம்பாறை மாவட்டம், காரைதீவைச் சேர்ந்த பிரபல பாடல் ஆசிரியர் இரா.இராஜமோகனின் 38 ஆவது இசைத்தட்டு வெளியீடு காரைதீவில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

காரைதீவு விபுலானந்த மத்திய கல்லூரியின் பவள விழா நடைபவனியை மையமாக வைத்து "காரைதீவு புகழ் பாடல்" எனும் மகுடத்தின் கீழ் ஆக்கப்பட்ட பாடல்களின் தொகுப்பாக இந்த இசைத்தட்டு அமையப் பெற்றிருக்கிறது.

முதலாவது இசைத்தட்டை காரைதீவு பிரதேச செயலாளர் பொறியியலாளர் ஜி.அருணனிடம் பாடலாசிரியர் இராஜமோகன் வழங்கி வெளியிட்டு வைத்தார்.

அந்தச் சமயம் கலாசார உத்தியோகத்தர்களான சுதர்சன் சுரேஸ் உள்ளிட்ட உத்தியோகத்தர்களும் சமூகமளித்திருந்தனர்.

குறித்த பாடல்களை எழுதியதோடு மட்டுமல்லாமல் பாடியுமிருக்கும்

கலைஞர் ராஜமோகன் கொழும்புத் துறைமுகத்தில் பணியாற்றுபவர்.

அவர் கடந்த பல வருடங்களாக ஆன்மீகம் தொடர்பான பாடல்களை எழுதிப் பாடி 37 இசைத்தட்டுகளை வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.













# அட்டாளைச்சேனை இளைஞர், யுவதிகளுக்கான இரண்டாம் மொழி பயிற்சி நெறி ஆரம்ப நிகழ்வு

(எஸ்.எம்.அறூஸ்)

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சின் கீழ் இயங்கும் தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்துக்கான செயலகத்தின் நிதிப் பங்களிப்பின் மூலம் அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட இளைஞர், யுவதிகளுக்கான 100 மணித்தியால சிங்களப் பாடநெறியானது அட்டாளைச்சேனை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் ஏ.சீ. அகமட் அப்கரின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் தேசிய ஒருமைப்பாட்டு அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எம். முஹம்மட் றிஸான் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எம். ஜஃபர் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு சிறப்பித்ததுடன் பாடநெறியை ஆரம்பித்து வைத்தார்.

சமூகங்களுக்கிடையில் ஒற்றுமை, அரச தனியார் தொழில்வாய்ப்பில் சிறந்த நிர்வாகக் கட்டமைப்பை ஏற்படுத்தல், தேசிய செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்தல், இன ரீதியான முரண்பாட்டைக் களைதல் போன்ற எண்ணக்கருவை அடிப்படையாகக் கொண்டு இந்தப் பாடநெறி இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதில் அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தின் கணக்காளர் எப். பர்ஹான், தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்துக்கான செயலகத்தின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர் ஹாசிம் சாலிஹ், கிராம நிர்வாக உத்தியோகத்தர் எம்.எஸ்.ஏ.நியாஸ் மற்றும் சிங்கள மொழி வளவாளர் எம்.எம். பாசில் மற்றும் சிங்கள பாடநெறி பயிலுநர்களும் கலந்து கொண்டனர்.











# அந்நிய செலாவணியை ஈட்டித்தருபவர்களுக்கு உபகாரமாகவே ஊக்குவிப்பு கொடுப்பனவு

## அமைச்சரவை பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவிப்பு

நாட்டுக்கு அந்நிய செலாவணியை ஈட்டித்தருபவர்களுக்கு ஒரு உபகாரமாகவே அவர்களுக்கான ஊக்குவிப்பு கொடுப்பனவை வழங்குவதற்கு அரசாங்கம் முன்வந்துள்ளதாக அமைச்சரும் அமைச்சரவை பேச்சாளருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில், தனியார் நிறுவனங்களின் ஊழியர்களான பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு எந்த அடிப்படையில் வருகை அடிப்படையிலான இந்த ஊக்குவிப்பு கொடுப்பனவை அரசாங்கம் வழங்குகிறது என கேள்வி எழுப்பட்டிருந்தது. அதற்கு பதிலளித்த அமைச்சரவை பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ,

"நாட்டின் பொருளாதாரத்தில் பங்களிப்பு செய்கின்ற விவசாயிகளுக்கு உரமானியம் வழங்கப்படுகிறது. தங்களது உற்பத்திகளை அதிகரிப்பதற்கு அவர்களுக்கு வழங்கப்படும் இந்த மானியத்தை போலவே பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கும் வழங்கப்படும்.

இதனூடாக அவர்களது வருகை அதிகரித்து, அவர்களது உற்பத்தி அதிகரிக்குமாயின், நாட்டுக்கே அதிகளவில் நன்மை கிடைக்கும்.

பெருந்தோட்ட நிறுவனங்களும் சம்பள அதிகரிப்பு தொடர்பில் தீர்மானமொன்றை எடுக்கவேண்டும். உரிய இலக்குகளை அடையப்படவில்லையாயின் பெருந்தோட்டங்களை மீள அரசின் வசமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி தமது வரவு செலவு திட்ட உரையில் குறிப்பிட்டார்.

எனவே, நாட்டுக்கு அந்நிய செலவாணியை ஈட்டித்தருவோர் அவர்களுக்கு நியாயம் கிடைக்க செய்வது அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

அரசதுறையா, தனியார்துறையிலா, சுயதொழிலாளர்களா என்றும் பாராமல், நாட்டின் பொருளாதாரத்துக்கு எந்த பகுதியிலிருந்தேனும் பங்களிப்பு செய்பவர்களுக்கு உதவி வேண்டியது, நிவாரணம் அளிக்க வேண்டியது அரசாங்கத்தின் முக்கிய பொறுப்பாகும்.

சில தனியார் துறைக்கு அரசாங்கம் வேதனத்தில் பங்களிப்பு செய்யாவிட்டாலும், உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குகிறது.

அதேநேரம், பெருந்தோட்ட தொழிலாளர்களும் இந்த நாட்டில் வரி செலுத்துபவர்கள் என்றும் அவர்களுக்காக அரச நிதியை செலவிடவதில்லை எந்த பிரச்சினையும் இல்லை எனவும் குறிப்பிட்டார்.

முன்மொழிந்த கொடுப்பனவுகளை பெருந்தோட்ட நிறுவனங்களும் வழங்கும்." என்று தெரிவித்தார்.

# முதலீட்டாளர் பாதுகாப்பை உறுதிப்படுத்த புதிய சட்டம்




முதலீட்டாளர்களுக்குப் பாதுகாப்பு, கொள்கை உறுதிப்பாடு மற்றும் ஊகிக்கும் இயலுமையை உறுதிப்படுத்தும் நோக்குடன், புதிய முதலீட்டுப் பாதுகாப்புச் சட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கான ஆரம்ப நடவடிக்கைகளுக்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.

முதலீட்டாளர்களின் தொழில்கள் மற்றும் சொத்துக்கள் உட்பட தனிப்பட்ட சொத்துக்களைத் தான்தோன்றித்தனமாகப் அரசுடமையாக்குவதைத் தடுத்தல் இந்தச் சட்டத்தின் பிரதான இலக்காகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, முதலீட்டாளர்களுக்குப் பயனுள்ள மாற்றுவழிப் பிணக்குத் தீர்க்கும் வழிமுறையாகச் செயற்பட, முதலீட்டுப் பாதுகாப்புச் சபையொன்றை தாபிப்பதற்கும் இதில் திட்டமிடப்பட்டுள்ளது.

முதலீட்டுச் சூழலில் நீண்டகால கொள்கை உறுதிப்பாட்டையும் ஊகிக்கும் இயலுமையையும் ஏற்படுத்துவது இதன் மற்றுமொரு முக்கிய நோக்கமாகும்.

2025 ஆம் ஆண்டுக்கான பாதீட்டின் மூலம் முன்மொழியப்பட்ட இந்தச் சட்டத்தை உருவாக்குவதற்கான கருத்தாக்கப் பத்திரத்தைத் தயாரிப்பதற்காக, ஏற்கனவே அதிகாரிகள் குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்தது.

இந்தக் குழுவால் தயாரிக்கப்பட்ட கருத்தாக்கப் பத்திரத்தின் அடிப்படையில் சட்டமூலத்தைத் தயாரிக்குமாறு சட்டமா அதிபருக்கு ஆலோசனை வழங்குவதற்காக, நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இந்த நடவடிக்கை, நாட்டின் முதலீட்டுச் சூழலை மேம்படுத்துவதிலும், உள்ளூர் மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்துவதிலும் ஒரு முக்கியமான மைல்கல்லாகக் கருதப்படுகிறது.

# டில்லி கார் வெடிப்பு வழக்கு என்.ஐ.ஏ. வசம் ஒப்படைப்பு



டில்லி கார் குண்டுவெடிப்பு வழக்கு விசாரணையை தேசிய புலனாய்வு முகமையான என்.ஐ.ஏ. வசம் மத்திய உள்துறை அமைச்சகம் வழங்கியுள்ளது.

டில்லி செங்கோட்டை அருகே நேற்று முன்தினம் மாலை நிகழ்ந்த கார் குண்டு வெடிப்பில் 13 பேர் உயிரிழந்தனர், பலர் படு காயமடைந்தனர். இந்த குண்டுவெடிப்பு தொடர்பாக, சட்டவிரோத தடுப்புச் சட்டம் பிரிவு 16 மற்றும் 18, குண்டு வெடிப்புச் சட்டத்தின் பல்வேறு பிரிவுகள், பாரதிய நியாய சன்ஹிதா ஆகிய சட்டங்களின் கீழ் டில்லி கோட்வாலி பொலிஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில், இந்த வழக்கு விசாரணையை தேசிய புலனாய்வு முகமை (என்.ஐ.ஏ) வசம் ஒப்படைத்து மத்திய உள்துறை அமைச்சகம் உத்தரவிட்டுள்ளது.

முழுமையான, ஒருங்கிணைந்த விசாரணையின் முக்கியத்துவத்தை உணர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. இதையடுத்து, டில்லி பொலிஸாரிடம் இருந்து வழக்கு விசாரணையை என்ஐஏ விரைவில் முறைப்படி ஏற்கும் என தகவல் வெளியாகி உள்ளது. மேலும், இந்த வழக்கு தொடர்பாக டில்லி பொலிஸ் சேகரித்துள்ள ஆவணங்கள், தரவுகள் அனைத்தும் என்.ஐ.ஏ. வசம் ஒப்படைக்கப்படும்.

முன்னதாக, வெடிவிபத்து தொடர்பாக டில்லியில் உள்ள தனது இல்லத்தில் நேற்று காலை உயர்மட்ட ஆலோசனைக் கூட்டத்தை மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா நடத்தினார்.

இதில், உள்துறை செயலாளர் கோவிந்த் மோகன், ஐ.பி. இயக்குநர் தபன் தேகா, என்ஐஏ டைரக்டர் ஜெனரல் சதானந்த் வசந்த் டேட, டெல்லி காவல் ஆணையர் சத்திஷ் கோல்ச்சா ஆகியோர் கலந்து கொண்டனர். ஜம்மு காஷ்மீர் டிஜிபி நளின் பிரபாத் வீடியோ கான்ஃபரன்சிங் முறையில் கலந்து கொண்டார்.

இந்த ஆலோசனையை அடுத்து, வழக்கு விசாரணை என்ஐஏ வசம் ஒப்படைக்கப்பட்டது. இந்த குண்டுவெடிப்பு தீவிரவாத நடவடிக்கையாக இருக்கலாம் என்பதால் வழக்கு விசாரணை என்ஐஏ வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து, இரண்டாவது ஆலோசனைக் கூட்டம் மாலை 3 மணி அளவில் டெல்லி கர்த்தவ்ய பவனில் உள்ள உள்துறை அமைச்சக அலுவலகத்தில் நடைபெற்றது. இதில், இதுவரை நடைபெற்ற விசாரணைகளின் விவரங்கள் குறித்து ஆலோசிக்கப்பட்டதாக தகவல் வெளியாகி உள்ளது. மேலும், எந்த தீவிரவாத இயக்கம் இதில் சம்பந்தப்பட்டிருக்கலாம் என்பது குறித்தும் ஆலோசனை நடந்துள்ளது.

முன்னதாக, தடய அறிவியல் துறைகுழுவும், என்ஐஏ குழுவும் இரண்டாவது நாளாக இன்றும் குண்டுவெடிப்பு நிகழ்ந்த இடத்தில் ஆய்வு மேற்கொண்டன.

# ஸ்டாலின் தொகுதியில் போலி வாக்காளர்கள்

## நிர்மலா சீதாராமன் குற்றச்சாட்டு



கோவை அவிநாசி சாலையில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் பா.ஜ.க. மாநில மற்றும் மாவட்ட நிர்வாகிகள் கூட்டம் நேற்று நடைபெற்றது.

இந்நிகழ்வில் மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தலைமை வகித்தார். மாநில தலைவர் நயினார் நாகேந்திரன், தேசிய மகளிர் அணி தலைவர் மற்றும் எம்எல்ஏ, வானதி சீனிவாசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன்,

“ஜி.எஸ்.டி வரி மாற்றம் செய்யப்பட்டதால் பல்வேறு பொருள்களின் விலை குறைந்துள்ளது. தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பின் சார்பில் நடத்தப்படும் பாராட்டு விழாவில் கலந்துகொள்ள கோவை வந்துள்ளேன்.

தமிழ்நாடு முழுவதும் ‘எஸ்.ஐ.ஆர்’ பணிகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து தி.மு.க. போராட்டம் நடத்துவது ஆச்சரியம் அளிக்கிறது. இந்நடவடிக்கையை பா.ஜ.க. கொண்டு வந்தது போல் தி.மு.க-வினர் பேசுகின்றனர். கடந்த 1952-ம் ஆண்டு முதல் 13 முறை ‘எஸ்ஐஆர்’ நடைபெற்றுள்ளது. அப்போது காங்கிரஸ் கூட்டணியில் இருந்த திமுக எதுவும் செய்யாமல், தற்போது மட்டும் ஏன் போராட்டம் நடத்துகிறது? முதல்வர் ஸ்டாலின் என்ன சொல்கிறோம் என புரியாமல் ஒரு வீடியோ வெளியிட்டுள்ளார். துணை முதல்வர் ‘எஸ்.ஐ.ஆர்’ என்பது என்ன என தெரியாமல் பேசுகிறார்.

தங்களின் ஆட்சியின் தோல்விகளை மறைக்க தி.மு.க இதுபோன்ற நிலைப்பாட்டை எடுத்து வருகிறது. எதிர்க்கட்சிகளோ, பா.ஜ.கவோ வெற்றி பெற்றால் ‘இவிஎம்’ இயந்திரங்கள் மீது குற்றம் சாட்டுகின்றனர். திமுக வெற்றி பெறும்போது எதுவும் எதிர்த்து பேசுவதில்லை. பிஹாரில் தேர்தல் நடைபெறும் நிலையில், ராகுல் காந்தி ஹரியானாவில் வாக்கு திருட்டு நடந்துள்ளது என பேசுகிறார்.

தமிழ்நாட்டில் முதல்வர் ஸ்டாலினின் கொளத்தூர் தொகுதியில் மட்டும் 4,379 போலி வாக்காளர்கள் கண்டறியப்பட்டுள்ளனர். ஒரே பெயர், ஒரே சொந்தகாரர்கள் பெயர், ஒரே வயது. இருப்பினும் அட்டை எண்கள் மட்டும் வேறு. மொத்தம் 933 வாக்காளர்கள் போலி முகவரியில் உள்ளனர். இது போன்ற முறைகேடுகளை நீக்க வேண்டாமா? கொளத்தூர் தொகுதியில் இத்தகைய முறைகேடுகளால் தான் முதல்வர் ஸ்டாலின் வெற்றி பெற்றாரா என நாங்கள் கேட்கலாமா?

தற்போது கண்டறியப்பட்டுள்ள முறைகேடுகளை நீக்க வேண்டாமா? பிஹாரில் 22 லட்சம் வாக்காளர்கள் இறந்தவர்கள். இருப்பினும் வாக்காளர் பட்டியிலில் இடம்பெற்றுள்ளது. 7 லட்சம் வாக்காளர்கள் ஒரு இடத்தில் மட்டுமின்றி மேலும் வேறு இடத்திலும் பெயர் பதிவு செய்துள்ளனர். 35 லட்சம் பேர் நிரந்தரமாக பிஹாரை விட்டு வெளியேறி விட்டோம் என கூறியுள்ளனர்.

பிஹாரில் மட்டும் 64 லட்சம் பெயர் வாக்காளர் பட்டியலில் இருக்கக் கூடாது. அதற்குத்தான் தேர்தல் ஆணையம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இரண்டாவது கட்டமாக தேர்தல் ஆணையம் 9 மாநிலங்கள் மற்றும் 3 யூனியன் டெரிட்டரிகளிலும் ‘எஸ்ஐஆர்’ பணிகளை மேற்கொள்ள உள்ளது. இந்திய அரசியலமைப்பு சட்டத்திலும் தேர்தல் ஆணையத்திற்கு இந்த அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இந்திய ஏற்றுமதியாளர்கள் மீது அமெரிக்க அதிபர் 50 சதவீத வரி விதிப்பு அமலுக்கு வந்து 3 மாதங்கள் கடந்த நிலையில் சலுகை திட்டங்கள் அறிவிப்பது தொடர்பாக தொழில் துறையினருடன் பேசி வருகிறோம். விரைவில் அறிவிப்பு வெளியிடப்படும் என்று நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.







# பாகிஸ்தானில் நீதிமன்றத்துக்கு வெளியே குண்டுவெடிப்பு தாக்குதல்: 12 பேர் பலி!

பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில் உள்ள நீதிமன்றத்துக்கு வெளியே நடந்த தற்கொலைப் படை தாக்குதலில் 12 பேர் கொல்லப்பட்டனர் 20 பேர் காயமடைந்தனர்.

இஸ்லாமாபாத்தின் ஜி-11 பகுதியில் உள்ள நீதிமன்ற வளாகத்தின் நுழைவாயிலுக்கு அருகில் நேற்று தற்கொலை குண்டுவெடிப்பு தாக்குதல் நடந்தது. இந்தத் தாக்குதலில் உயிரிழந்த 12 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளதாக அரசு நடத்தும் பாகிஸ்தான் தொலைக்காட்சி செய்தி வெளியிட்டுள்ளது.

மேலும், ‘குண்டுவெடிப்பில் கொல்லப்பட்ட 12 பேரின் உடல்கள் இஸ்லாமாபாத்தில் உள்ள பாகிஸ்தான் மருத்துவ அறிவியல் நிறுவன மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளன. காயமடைந்த 20 பேரும் அந்த மருத்துவமனையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இது ஒரு தற்கொலை குண்டுவெடிப்புத் தாக்குதல் என்று தெரியவந்துள்ளது. தற்கொலைத் தாக்குதல் நடத்தியவரின் தலை சாலையில் கிடந்தது’ என்று பாகிஸ்தான் தொலைக்காட்சி செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த குண்டுவெடிப்புக்கு எந்தவொரு அமைப்போ அல்லது தனிநபரோ இதுவரை பொறுப்பேற்கவில்லை. ஆனால், பாகிஸ்தானுக்கும் ஆப்கானிஸ்தானின் தாலிபான் அரசுக்கும் இடையிலான மூன்றாவது சுற்று பேச்சு வார்த்தையில், ஆப்கானிஸ்தானில் இருந்து வெளிப்படும் பயங்கரவாதப் பிரச்சினையைச் சமாளிப்பது குறித்து எந்த உடன்பாடும் எட்டத் தவறிய சில நாட்களுக்குப் பிறகு இந்தத் தாக்குதல் நடந்துள்ளது.

குண்டுவெடிப்பு நடந்த இடத்தை பாகிஸ்தான் உள்துறை அமைச்சர் மொஹ்சின் நக்வி பார்வையிட்டார். மேலும், குற்றவாளிகளை நீதியின் முன் நிறுத்துவதாக அவர் உறுதியளித்தார்.





# இஸ்ரேல் வீரர் ஒருவரின் உடலுக்குப் பதிலாக 15 பாலஸ்தீனியர்களின் உடலங்கள் ஒப்படைப்பு

இஸ்ரேலுடனான போர் நிறுத்த அமுலாக்கத்தின் ஒரு பகுதியாக, மேலும் ஒரு இஸ்ரேலியரின் உடலை ஹமாஸ் அமைப்பினர் ஒப்படைத்துள்ளனர்.

அந்தஉடல்,கடந்த2024ஆம்ஆண்டு காஸாவில் கொல்லப்பட்ட தங்கள் நாட்டு வீரருடையது என்று இஸ்ரேல் உறுதிப்படுத்தியது.

அந்த உடல் ஒப்படைக்கப்பட்டதற்குப் பதிலாக, இஸ்ரேலிலிருந்த 15 பாலஸ்தீனியர்களின் உடலங்களை அந்த நாட்டு அரசு காஸாவுக்கு அனுப்பியதாக காஸா சுகாதாரத் துறை அமைச்சு நேற்று முன்தினம் தெரிவித்தது.

இதன் மூலம், எப்போது வேண்டுமானாலும் முறியலாம் என்ற அபாயத்தில் இருக்கும் காஸா போர் நிறுத்த ஒப்பந்தத்தின் அமுலாக்கம் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லப்படுவது உறுதியாகியுள்ளது.

இத்துடன், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பின் 20 அம்ச போர் நிறுத்த திட்டம் காஸாவில் கடந்த மாதம் 10ஆம் திகதி அமுலுக்கு வந்ததிலிருந்து, இதுவரை 24 பிணைக் கைதிகளின் உடல்களை ஹமாஸ் அமைப்பினார் ஒப்படைத்துள்ளனர்.

பதிலுக்கு, 315 பாலஸ்தீனியர்களின் உடல்களை இஸ்ரேல் திருப்பி அனுப்பியுள்ளது.





# பாதுகாப்புக்கு இவ்வளவு நிதி எதற்காக? சபையில் சத்தியலிங்கம் எம்.பி. கேள்வி

யுத்தம் முடிவடைந்து 16 வருடங்கள் முடிவடைந்துள்ள நிலையிலும் பாதுகாப்பு அமைச்சுக்கு வரவு - செலவுத் திட்டத்தில் 10.26 வீத நிதியை ஒதுக்கியுள்ளமையை எப்படி நியாயப்படுத்த முடியும்? இந்த அமைச்சுக்கான பெருந்தொகையான நிதியை ஒதுக்கிடுவது நாட்டில் சமாதானத்தையோ, பொருளாதார அபிவிருத்தியையோ உறுதிப்படுத்த எந்த வகையிலும் பங்களிக்காது என இலங்கை தமிழரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற 2026 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான இரண்டாம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இலங்கை சுதந்திரமடைந்த போது இலங்கையின் பொருளாதார குறிகாட்டியானது ஆசிய நாடுகளில் பல்வேறு நாடுகளை விடவும் மிகவும் சிறப்பாக இருந்தது. ஜப்பானுக்கு அடுத்த நிலையில் இருந்ததாகவும் கூறப்படுகின்றது. ஆனால் இலங்கை பின்பற்றிய தவறாக அரசியல், பொருளாதார,கல்வி மற்றும் சமூக கொள்கைகளினால் பொருளாதாரத்திலும் சமூக விழுமியங்களிலும் பின்தள்ளப்பட்டு இனக் குழுக்களுக்கு இடையே முறுகல்கள் ஏற்படுத்தப்பட்டு இறுதியில் நாடு வங்குரோத்து நிலையை



அடைந்தது.

இந்நிலையில் அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்தின் அனுசரணை, வரி விதிப்புகள் மற்றும் வீண் விரயத்தை குறைத்தல், உல்லாசப் பிரயாணிகளின் வருகை ஆகிய நடவடிக்கைகள் மூலம் வருமானங்களை பெற்று நாட்டின் பொருளாதாரத்தை ஓரளவுக்கு உறுதி நிலைக்கு கொண்டு வந்துள்ளது.

இதனை தக்க வைப்பதற்கு, தொடர்ச்சியான - இறுக்கமான - நிதி நிர்வாகத்தை ஏற்படுத்த வேண்டிய பொறுப்பு இந்த அரசாங்கத்திற்கு உள்ளது. அத்துடன் நாட்டை மீள கட்டியெழுப்பும் அரசியல் பொருளாதார, கல்விக் கொள்கைகளை வகுக்க வேண்டிய பொறுப்பும் அரசாங்கத்திற்கு இருக்கின்றது. இதுவே நாட்டின் எதிர்காலப் போக்கை எதிர்வு கூறும், நாட்டின் சமானத்திற்கான அடிப்படையாகும்.

இந்த வரவு செலவுத் திட்டத்தில் முக்கியமான அமைச்சுகள் சில தவற விடப்பட்டுள்ளன. கல்வி அமைச்சு, விவசாயம், காணி, நீர்பாசன உள்ளிட்ட அமைச்சுகளுக்கு பெரிய தொகைகள் ஒதுக்கப்படவில்லை. ஆனால் போர் முடிவடைந்து 16 வருடங்கள் கடந்தும் பாதுகாப்பு அமைச்சுக்கு மிகவும் பெரிய தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. அதாவது 455 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இது மொத்த வரவு செலவுத் திட்டத்தில் 10.26 வீதமாகும். இந்த ஒதுக்கீட்டை எந்தளவில் நியாயப்படுத்த முடியும் என்று கேட்கின்றேன். இந்த பாரிய ஒதுக்கீடு இந்த நாட்டின் சமாதானத்தையோ, நாட்டின் பொருளாதார அபிவிருத்தியையோ ஏற்படுத்த எந்த வகையிலும் பங்களிக்கப் போவதில்லை என்பதனை கூறிக்கொள்கின்றேன்.

இதேவேளை நாட்டின் மனித வள மேம்பாட்டுக்கு மிகவும் அவசியமான மகளிர் மற்றும் சிறுவர்கள் அமைச்சு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சுக்கு குறைந்தளவான நிதியே ஒதுக்கப்பட்டுள்ளது. இது மன வருத்தத்தை தருகின்றது. நிதி ஒதுக்கீட்டை செய்து அதனை செலவு செய்வதால் மாத்திரம் மாற்றம் ஏற்படப் போவதில்லை. அந்த செலவால் ஏற்படக்கூடிய விளைவை அளக்கக்கூடிய வகையில் எதிர்கால திட்டங்கள் அமைய வேண்டும். - என்றார்.

# தமிழரின் பிரச்சினைகளுக்கான தீர்வுகள் குறித்து வரவு - செலவுத் திட்டத்தில் குறிப்புக் கூட இல்லை

## நாடாளுமன்றத்தில் ரவிகரன் எம்.பி. கவலை தெரிவிப்பு

(விஜயரத்தினம் சரவணன்)

வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் அரசியல் தீர்வு மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம், தமிழ் அரசியல் கைதிகளின் விடுவிப்பு உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவின் 2026 ஆம் ஆண்டிற்கான வரவு - செலவுத்திட்ட உரையில் நம்பிக்கைதருகின்ற விதமான கருத்துக்கள் எவையும் உள்ளடக்கப்படவில்லை என வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேவேளை இந்த வரவு - செலவுத் திட்டத்தில் வடக்கு கிழக்கிலுள்ள தொழிற்சாலைகள் தொடர்பிலும் கவனஞ்செலுத்தப்படவில்லை எனத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர், வடக்கு, கிழக்கு தமிழ் மக்களையும் இந்த அரசாங்கம் அணைத்துக்கொண்டு செயற்படவேண்டுமெனவும் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று 2026ஆம் ஆண்டிற்கான வரவு - செலவுத் திட்ட இராண்டாம் மதிப்பீட்டு விவாதத்தில் பங்கேற்று கருத்துத் தெரிவிக்கும்போதே



அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் -

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைப் பொறுத்தவரையில் பல தொழிற்சாலைகள் இயங்காத நிலையில் காணப்படுகின்றன.

குறிப்பாக ஒட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலை, காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை, பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை, வாழைச்சேனை காகிதத் தொழிற்சாலை ஆகிய இவ்வாறான தொழிற்சாலைகளை மீள இயங்கச் செய்வது குறித்து கவனஞ் செலுத்துங்கள். புறக்கணிக்கவேண்டாமெனக் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

அத்தோடு ஜனாதிபதியின் 2026 ஆம் ஆண்டிற்கான வரவு - செலவுத் திட்ட உரையில் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு விடயத்திலும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்திலும், அரசியல் கைதிகள் விடயத்திலும் நம்பிக்கை தரும் விதமான கருத்துக்கள் எவையும் உள்ளடக்கப்படவில்லை. வடக்கு மற்றும் கிழக்கிலுள்ள தமிழ் மக்களையும் அணைத்துக்கொண்டு செயற்படுமாறு கேட்டுக்கொள்கின்றேன் - என்றார்




# வவுனியாவில் சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய உணவகம் ஒன்றுக்கு “சீல்”!

**(வவுனியா நிருபர்)**

வவுனியா, ஹொரவப்பொத்தானை வீதியில் சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய தாகக் கூறப்படும் உணவகம் ஒன்று மாநகரசபை சுகாதார பரிசோதகர்களால் நேற்று “சீல்“ வைத்து மூடப்பட்டது.


வவுனியா, ஹொரவப்பொத்தனை வீதியில் உள்ள உணவகம் ஒன்றில் வழங்கப்பட்ட உணவில் புழு காணப் பட்டதாகவும், சுகாதார சீர்கேட்டுடன் உணவகம் இயங்கியதாகவும் தெரி வித்து வவுனியா மாநகரசபை பொது சுகாதார பரிசோதகர்களால் நீதிமன்ற உத்தரவுக்கமைய மூடப்பட்டது.

நேற்றில் இருந்து எதிர்வரும் 25 ஆம் திகதி வரை இந்த உணவகம் மூடப்பட்டுள்ளது. இந்தக் காலப்பகுதியில் சுகாதார பரிசோதகர்களின் அறிவுறுத் தலுக்கமைய திருத்த வேவைகளை மேற்கொள்வதற்கு அனுமதி வழங்கப் பட்டுள்ளது.









அறிவித்தல்

இந்த உணவகம் நீதிமன்ற கட்டளைக்கமைவாக திருத்த வேலைகளுக்காக 11.11.2025 ஆம் திகதியில் இருந்து 25.11.2025 ஆம் திகதி வரை தற்காலிகமாக மூடப்படுகிறது.

பொது சுகாதாரப் பரிசோதகர்
மாநகரசபை
வவுனியா







# மன்னாரில் சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய உணவகங்கள் மீது வழக்குகள் தாக்கலாகும்

(மன்னார் நிருபர்)

மன்னார் பள்ளிமுனை பிரதான வீதியில் உணவகங்கள் சில சுகாதார சீர்கேட்டுடன் இயங்கி வந்தன எனக் கூறப்பட்ட நிலையில் நேற்று செவ்வாய்க் கிழமை மன்னார் பொது சுகாதார பரிசோதகர்கள் தலைமையிலான குழுவினரால் அவை கண்காணிக்கப்பட்டன பல்வேறு சுகாதார சீர்கேடுகள் தொடர்பாக அந்த உணவகங்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.



மன்னார் பள்ளிமுனை பிரதான வீதி, வங்கிக்கு அருகில் அமைந்திருக்கும் இந்த உணவகங்கள் உரிய முறையில் சுகாதார விதிமுறைகளை பின்பற்றாமல் அசுத்தமாக உணவுகள் தயாரிக்கப்பட்டு பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்பட்டமை மன்னார் பொது சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் பொது சுகாதார பரிசோதகர் மற்றும் ஊழியர்களின் ஒத்துழைப்புடன் மேற் கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது தெரிய வந்தது.

உணவகத்தின் கழிவு நீர் உரிய விதமாக அகற்றப்படாமல் புழுக்கள், இளையான் உருவாக இடமளித்தமை, ஆரோக்கியமற்ற விதமான உணவுகள் தயாரிக்கப்பட்டமை, உணவு பொருள்கள் பாதுகாப்பற்ற முறையில் களஞ்சியப் படுத்தப்பட்டிருந்தமை போன்றவை கண்டறியப்பட்டன.

அதன் அடிப்படையில் அத்த்ச்க்சிய உணவக உரிமையாளர் மீது பல்வேறு பிரிவுகளில் மன்னார் நீதிவான் நீதி மன்றத்தில் வழக்குகள் தாக்கல் செய்யப்படவுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டது.












# முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு பிரதேசங்களில் வீதிகளுக்கான பெயர்ப் பலகைகளை நாட்டல்!

## திட்டம் நேற்று ஆரம்பித்து வைப்பு

(பா. சதீசன்)

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு பிரதேசங்களில் வீதிகளுக்கான பெயர் பலகைகளை நாட்டும் வேலைத்திட்டம், எலாயன்ஸ் பைனான்ஸ் நிதி நிறுவனத்தின் நிதி அனுசரணையில் புதுக்குடியிருப்பு கிளையின் ஒருங்கிணைப்பில் நேற்றையதினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

தற்போது பல வீதிகளில் பெயர் பலகைகள் சேதமடைந்து காணப்படுவதால், பொதுமக்கள் வீதிகளை அடையாளம் காண கடினமாக இருந்த நிலையில், அந்த சிரமத்தை நீக்கும் நோக்கில் புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் அனுமதியுடன் இத்திட்டம் முன்னெடுக்கப்படுகிறது. இதன் ஆரம்பமாக 30 வீதிகளுக்கான பெயர் பலகைகள் நாட்டப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் மிகப் பழமையான நிதி நிறுவனங்களில் ஒன்றான எலாயன்ஸ் பைனான்ஸ், 69 ஆண்டுகால பணி அனுபவத்துடன் 99 கிளைகள் மூலம் நாடு முழுவதும் நிதிச் சேவைகளை வழங்கி வருகின்றது. சமூகப் பொறுப்புத் திட்டங்களின் ஒரு பகுதியாக, ஒவ்வொரு ஆண்டும் மக்களுக்கு தேவையான பல சேவைகளை மேற்கொண்டு வரும் நிறுவனம், இவ்வருடம் பெயர் பலகை நாட்டும் திட்டத்தை முன்னெடுத்துள்ளது.

குறித்த செயற்திட்டத்தின் தொடக்க விழாவில், எலாயன்ஸ் பைனான்ஸ் நிறுவனத்தின் பிராந்திய துணைத்தலைவர் மே.தயாபரன், உதவி பொது மேலாளர் செ.நிசாந்தன், கிளை முகாமையாளர் ச.விமோறியந்தன், புதுக்குடியிருப்பு பிரதேச சபைத் தவிசாளர் வே.கரிகாலன், பிரதேச சபை உறுப்பினர் அ.சற்குணதாஸ் மற்றும் நிறுவன உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு பெயர் பலகைகளை நாட்டி வைத்தனர்.

இந்த முயற்சி, புதுக்குடியிருப்பு பிரதேச மக்களுக்கு பயனளிக்கும் சமூகநலத் திட்டமாகப் பாராட்டப்படுகிறது.












# வவுனியா ஈச்சங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்துக்கு அருகில் உள்ள காணியில் துப்புரவுப் பணிகள் ஆரம்பம்

(கி.வசந்தன்)

மாவீரர் நாளை முன்னிட்டு வவுனியா ஈச்சங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் சிரமதானப் பணிகள் நேற்று முன்னெடுக்கப்பட்டன.

ஈச்சங்குளம் மாவீரர் துயிலும் இல்லம் இராணுவத்தின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள நிலையில் கடந்த காலங்களைப் போல் அதற்கு அருகில் உள்ள இடத்தில் மாவீரர் தின ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

ஏற்பாட்டுக்குழுவினர் அந்தொ பகுதியில் மாவீரர் நினைவாக தீபம் ஏற்றி துப்புரவு பணிகளை ஆரம்பித்தனர்.

இதில் தமிழ் தேசிய மக்கள் முன்னனியின் வவுனியா மாவட்ட அமைப்பாளர் எஸ்.தவபாலன் உட்பட்ட ஏற்பாட்டு குழுவினர், இளைஞர், யுவதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.





# மட்டக்களப்பில் கைதான போலி சட்டத்தரணி நேற்று அடையாள அணிவகுப்பில் அடையாளம் காட்டப்பட்டார்

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பில் போலியாக சட்டத்தரணி போல செயற்பட்ட நபர் கைது செய்யப்பட்டமையை அடுத்து அவரை அடையாளம் காணும் அணிவகுப்பு நீதிமன்றத்தில் நேறு செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. அப்போது அவர் அடையாளம் காட்டப்பட்டார். அதையடுத்து எதிர்வரும் 24 ஆம் திகதி வரை 14 நாள்கள் அவரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதிவான் உத்தரவிட்டார்.

செவ்வந்தி பாணியில் மட்டக்களப்பில் செயற்பட்டுவந்த – 42 வயதுடைய – போலி ஆண் சட்டத்தரணி ஒருவரை கடந்த சனிக்கிழமை ஓந்தாச்சிமடம் பிரதேசத்தில் வாடகை வீடு ஒன்றில் தங்கியிருந்த சமயம் பொலிஸார் கைது செய்தனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட போது அவரை நேற்று செவ்வாய்க்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறும், அன்றைய தினம் அடையாள அணிவகுப்பு இடம்பெறும் எனவும் நீதிவான் கட்டளையிட்டிருந்தார்.

இதனையடுத்து நேற்று அவர் அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்தப்பட்டபோது அவருக்கு எதிராக முறைப்பாடு செய்த மூன்று பேரும் அடையாளம் காண்பித்தனர். இதையடுத்துஅந்த நபரை எதிர்வரும் 24 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

கடந்த ஒன்றரை வருடங்களுக்கு மேலாக சட்டத்தரணி போலி நடித்து வந்துள்ள இவர் உயர் கல்வியில் விஞ்ஞான பாடம் கற்றுள்ளார் எனவும், யாழ்ப்பாணத்தைப் பூர்வீகமாகக் கொண்ட இவர் யுத்தத்தினால் இடம்பெயர்ந்து, கொழும்பில் வாழ்ந்து வந்தார் எனவும், கல்முனை பொலிஸ் பிரிவிலுள்ள பிரதேசம் ஒன்றில் திருமணம் முடித்துள்ளார் எனவும் பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதேவேளை அவரிடம் இருந்து கைப்பற்றப்பட்ட சட்டத்தரணி என அடையாளப்படுத்தும் போலி வருகை அட்டை மற்றும் இறப்பர் முத்திரை, சட்டத்தரணி என வாகனத்துக்கு அடையாளப்படுத்தி ஒட்டப்படும் ஸ்டிக்கர்கள் போன்றவற்றைத் தயாரித்து கொடுத்த கல்முனை பிரதேசத்தைச் சேர்ந்த அச்சக உரிமையாளர் ஒருவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார். அவரை நீதிவான் பிணையில் செல்ல அனுமதித்தார்.



# வவுனியாவில் மாநகரசபையின் அனுமதி எதுவுமின்றி சட்டவிரோதமாக அமைக்கப்படும் வர்த்தக நிலையம்

## மாநகரசபை அதிகாரிகள் அசமந்தம் எனக் குற்றச்சாட்டு

(வவுனியா நிருபர்)

வவுனியா மாநகரசபையின் அனுமதியின்றி அரச நிலத்தில் அமைக்கப்படும் வர்த்தக நிலையம் தொடர்பில் மாநகரசபை நிர்வாகம் அசமந்தப் போக்குடன் செயற்படுவதாகக் குறறம் சாட்டப்பட்டுள்ளது.

வவுனியா நகரப் பகுதியில் உள்ள அரச காணியில் முறையான அனுமதியின்றி சிறிதாக அமைக்கப்பட்டிருந்த வர்த்தக நிலையம் ஒன்றை பெரிதாகக் கட்டும் நடவடிக்கை கடந்த சில தினங்களாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இந்தச் சம்பவம் தொடர்பில் வவுனியா மாநகர சபை செயலாளருக்குப் பலரும் முறைப்பாடு செய்தும் அவர் உரிய வகையில் நடவடிக்கை எடுக்கவில்லை எனக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

வவுனியா மாநகரசபையின் மேயர், பிரதி மேயர் மற்றும் சபை நடவடிக்கைகளுக்கு நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்துள்ள நிலையில், இச் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இது தொடர்பில் சபையின் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் செயலாளரிடம் தெரியப்படுத்தி இருந்தமையுடன், சம்பவ இடத்திறகும் சென்று அதனை தடுத்து நிறுத்தியிருந்தனர்.

மீண்டும் நேற்று முன் தினம் அதன் கட்டுமான நடவடிக்கைன் இடம்பெற்ற நிலையில் எதிர்கட்சி உறுப்பின்களின் அழுத்தத்தின் மூலம் தடுத்து நிறுத்தப்பட்டிருந்தது.

அத்துடன், அனுமதியின்றி மாநர சபை கட்டளையை மீறிக் கட்டப்பட்ட பகுதியை உடனடியாக அகற்றுமாறு வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர், வவுனியா மாவட்ட உதவித் உள்ளூராட்சி ஆணையாளர் ஆகியோர் மாநகரசபை நிர்வாகத்திற்கு அறிவுறுத்தல் வழங்கிய போதும், நிர்வாகம் அதனை செயற்படுத்தாது அசமந்தப் போக்குடன் செயற்படுவதாக சபையின் எதிர்கட்சி உறுப்பினர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

அந்த சட்டவிரோதக் கட்டுமானத்தை அகற்ற மாநகரசபையின் உத்தியோகத்தர்கள் மற்றும் வாகனங்கள் சென்ற போதும் மாநகர சபை உயர் அதிகாரிகள் அதனை சட்ட திட்டங்களுக்கு அமைவாக மேற்கொள்ள தவறியியமையால் அவை அகற்றப்படாமல மாநகரசபை உத்தியோகத்தர்களும், வாகனமும் திரும்பிச் சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.











# மத்திய மாகாண அனைத்து மதத் தலைவர்களின் சங்க செயற்குழு மாநாடு நேற்று நுவரெலியா செயலகத்தில்

**(ஆர்.எவ்.எம்.சுஹெறல்)**


நுவரெலியா, மாத்தளை, கண்டி மாவட்டங்களை மையப்படுத்தி மத்திய மாகாண அனைத்து மதத் தலைவர்கள் சங்கத்தின் செயற்குழு மாநாடு நுவரெலியா மாவட்ட செயலாளரும் அரசாங்க அதிபருமான துஷாரி தென்னகோன் தலைமையில் நேற்றுக் காலை நுவரெலியா மாவட்ட செயலகத்தின் சோகம் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.


நுவரெலியா, கண்டி மற்றும் மாத்தளை மாவட்டங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் பௌத்த, இந்து, இஸ்லாமிய மற்றும் கத்தோலிக்க மதங்களைச் சேர்ந்த முப்பத்திரண்டு மதத் தலைவர்கள் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

கடந்த சில ஆண்டுகளாக மத நல்லிணக்கத்திற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் திட்டங்கள் குறித்த முன்னேற்ற மதிப்பாய்வு நடத்தப்பட்டது, மேலும் 2026 ஆம் ஆண்டில் மேல் மாகாணத்தில் செயல்படுத்தப்படவுள்ள சர்வமத திட்டங்கள் மற்றும் மத சக வாழ்வை மேம்படுத்துவதற்கான திட்டங்கள் குறித்து மதத் தலைவர்களிடமிருந்து ஆலோசனைகள் மற்றும் யோசனைகள் பெறப்பட்டன.

இந்த நிகழ்ச்சித் திட்டம் தேசிய அமைதிப் பேரவை, நுவரெலியா மாவட்டச் செயலகத்துடன் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்த நிகழ்ச்சியின் விருந்தினர்களாக நுவரெலியா செயலாளர் மற்றும் அரசாங்க அதிபர் திருமதி துஷாரி தென்னகோன், மாவட்ட நிர்வாக செயலாளர் திருமதி தினிகா கவிசேகர, தேசிய அமைதிப் பேரவையின் திட்ட இயக்குநர் திருமதி நிரோஷா அந்தோணி, நுவரெலியா மற்றும் மத்திய மாகாண ஒருங்கிணைப்பாளர் திருமதி இரேஷா உதானி, மத விவகார ஒருங்கிணைப்பு அதிகாரி திருமதி இரேஷா உதானி மற்றும் பிற அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.
















# மதம், நம்பிக்கைச் சுதந்திரத்தை இளைஞர்கள் மத்தியில் கட்டியெழுப்பும் செயற்றிட்டம் முல்லைத்தீவில் அறிமுகம்

**(பா.சதீசன்)**

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் ‘மதம் மற்றும் நம்பிக்கை சுதந்திரத்தை இளைஞர்கள் மத்தியில் கட்டியெழுப்பும் செயற்திட்டம்’ தொடர்பான திட்ட அறிமுகம் எழுத்தாணி நிறுவனத்தின் ஏற்பாட்டில் நேற்றையதினம் காலை 10 மணியளவில் இடம்பெற்றிருந்தது.

மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் சமூக மட்ட அமைப்புகளுக்கிடையிலே இந்தத் திட்ட அறிமுகம் நேற்றையதினம் இடம்பெற்றது.

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள இரண்டு பிரதேச செயலக பிரிவுகளின் கீழ் 8 கிராம சேவையாளர் பிரிவுகளில் கீழ் இச் செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

செயற்திட்டம் தொடர்பில் கருத்து தெரிவித்த முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (நிர்வாகம்) திருமதி.ச. மஞ்சுளாதேவி – எமது மாவட்டம் போரின் பாதிப்புகளை கடந்து தற்போது மீளெழுச்சி பெற்று வருகின்றது. சமூக ஊடகங்கள் வழியாக பல்வேறு சமூக பிரச்சினைகள் வெளிப்படுகின்றன. இக்காலகட்டத்தில் சமூக மற்றும் மத நல்லுறவை வலுப்படுத்துவது அவசியம். அதற்காகப் பிரதேச மட்ட உத்தியோகத்தர்கள், பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகியோருக்கிடையில் விழிப்புணர்வை ஏற்படுத்துவது முக்கியம். இதை நோக்கமாகக் கொண்டு இத்திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. எனவே உத்தியோகத்தர்கள் அனைவரும் இதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்” எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் உதவி திட்டமிடல் பணிப்பாளர் சிராஜ், எழுத்தாணி நிறுவனத்தின் நிறைவேற்று பணிப்பாளர் வ.ராஜ்குமார், திட்ட ஆலோசகர் வே.காண்டீபன், கரைதுறைப்பற்று மற்றும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகங்களின் நிர்வாக உத்தியோகத்தர்கள், சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள், கிராம சேவையாளர்கள், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் எழுத்தாணி நிறுவனத்தின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.













# கிழக்குப் பல்கலை திருமலை வளாக மாணவர்களினால் வீதி நாடக நிகழ்வு

(எஸ்.கீதபொன்கலன்)

கிழக்குப் பல்கலைக்கழக திருகோண மலை வளாக மாணவர்களினால் "சமத்துவமும் உரிமைகளும் நிறைந்த எதிர்காலத்தை நோக்கி..." என்ற தொனிப்பொருளில் வீதி நாடகம் ஒன்று, நேற்றுக் காலை திருகோணமலை பட்டிணமும் சூழலும் பிரதேச செயல கத்திற்கு முன்பாக நிகழ்த்தப்பட் டது.

இதில் பெண்கள், சிறுவர்கள் மற்றும் மாற்றுப் பாலினத்தோர் ஆகியோரின் உரிமைகள் தொடர்பாக பேசப்பட்டது.

தமிழ், சிங்களம் ஆகிய மொழிகளில் இடம்பெற்ற இந்த விழிப்புணர்வு வீதி நாடகம் மத்திய பஸ் நிலையம் நிலையம் உள்ளிட்ட பல்வேறு இடங்க ளிலும் நிகழ்த்தப்பட்டிருந்தது.







# வடக்கில் மாகாணக் கல்வி அமைச்சின் கீழான விசாரணைகளை விரைந்து முடிவுறுத்துங்கள்!

## அதிகாரிகளுக்கு ஆளுநர் அறிவுறுத்தல்

**(ந.லோகதயாளன்)**

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் கீழ் கடந்த காலங்களில் முன்னெடுக்கப்பட்ட பல விசாரணைகள் இன்னும் முடிவுறுத்தப்படவில்லை. தங்களுக்கு வேண்டப்படாதவர்களுக்கு எதிரான விசாரணைகள் துரிதமாகவும், வேண்டப்பட்டவர்களுக்கு எதிரான விசாரணைகள் முன்னெடுக்கப்படாமல் இழுத்தடிக்கப்படும் விதத்திலும் முன்னெடுக்கப்படுகின்றன என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. அனைத்து விசாரணைகளையும் 6 மாதங்களுக்குள் நிறைவு செய்யுமாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் பணிப்புரை வழங்கினார்.

வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் கீழ் இந்த ஆண்டு நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்களின் நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம் தொடர்பான மாதாந்தக் கலந்துரையாடல், வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் தலைமையில் நேற்று செவ்வாய்க்கிழமை ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது.

இதில் கல்வித் திணைக்களம், விளையாட்டுத் திணைக்களம் மற்றும் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்களின் முன்னேற்றங்கள் ஆராயப்பட்டன. கல்வித் திணைக்களத்தின் கீழ் பல்வேறு நிதி மூலங்களிலிருந்து



முன்னெடுக்கப்படும் திட்டங்கள் ஒவ்வொரு வலய ரீதியாக மதிப்பாய்வு செய்யப்பட்டன.

சில ஒப்பந்தகாரர்கள் காட்டும் அலட்சியமான பணிச்செயல்முறை குறித்தும் கலந்துரையாடப்பட்டது. ஒப்பந்தகாரர்களின் பணிகளை மதிப்பீடு செய்து அவற்றை பகிரங்கப்படுத்தி, எதிர்காலத்தில் அவர்களுக்கு எதிரான நடவடிக்கைகளுக்கான பரிந்துரைகள் முன்வைப்பது பற்றியும் ஆராயப்பட்டது. திட்டங்கள் முடிவடைந்த பின்னரும் ஒப்பந்தகாரர்கள் சிட்டைகளை வழங்காமல் கொடுப்பனவுகளை தாமதப்படுத்துவது குறித்தும் விவாதிக்கப்பட்டது.

திணைக்கள ரீதியான மீளாய்வுக்குப் பின், வடக்கு மாகாணத்தின் சில பிரதேசங்கள் “கஷ்டப் பிரதேசம்“ அல்லது “அதிகஷ்டப் பிரதேசம்“ வகைப்படுத்திலிருந்து நீக்கப்பட்டமை குறித்து கலந்துரையாடப்பட்டது. அவை மீளவும் நடைமுறைப்படுத்தப்படுவதற்கான நியாயப்பாடுகளுடன் கோரிக்கை முன்வைக்குமாறு ஆளுநர் பணிப்புரையிட்டார்.

கடல் கடந்த தீவுகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களுக்கு பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் சுற்றறிக்கைக்கு இணங்க ஆபத்துக் கொடுப்பனவை வழங்க துரிதமான நடவடிக்கைகள் எடுக்குமாறும் ஆளுநர் உத்தரவிட்டார்.

பாடசாலைகளில் பல்வேறு காரணங்களின் பெயரில் மாணவர்களிடமிருந்து பணம் வசூலிக்கப்படுவதாக தொடர்ச்சியான முறைப்பாடுகள் கிடைப்பதால் அத்தகைய அதிபர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு ஆளுநர் அறிவுறுத்தினார்.

ஆசிரியர்கள் கற்றல் பணிகளை மாணவர்களுக்கு வழங்கிவிட்டு தங்களது கைப்பேசிகளில் காணொளிகள் பார்ப்பதாக முறைப்பாடுகள் வந்துள்ளன எனவும் இதனைத் தடுக்கும் பொருட்டு வலயக் கல்விப் பணிப்பாளர்கள் தாங்களும், தங்கள் கீழ் பணிபுரியும் அதிகாரிகளும் திடீர் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் ஆளுநர் கேட்டுக்கொண்டார்.

இந்தக் கலந்துரையாடலில் வடக்கு மாகாண பிரதம செயலாளர், ஆளுநரின் செயலாளர், கல்வி அமைச்சின் செயலாளர், பிரதிப் பிரதம செயலாளர் (நிதி, திட்டமிடல், பொறியியல்), கல்வி, விளையாட்டு, பண்பாட்டலுவல்கள் திணைக்கள பணிப்பாளர்கள், மாகாண கட்டடங்கள் திணைக்களப் பணிப்பாளர், வலயக் கல்விப் பணிப்பாளர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.





# இன்றைய ராசி பலன்கள்- 12.11.2025




இன்று முக்கியமான முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும்.உங்கள் நடவடிக்கைகளில் கவனம் தேவை. இன்று உணர்ச்சி வசப்படுதலை தவிர்க்க வேண்டும்.

உங்கள் சகபணியாளர்களுடன் சச்சரவுகள் ஏற்படலாம்.பொறுமையுடன் இருந்து செயலாற்றவும்.

தொடர்பாடலில் உள்ள குறைபாடு காரணமாக உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். புரிந்துணர்வு மூலம் இதனை தவிர்க்கலாம்.

இன்று பணப் பற்றாக்குறை காணப்படும். இன்று காணப்படும் செலவினங்களை சமாளிக்க கடன் வாங்க நேரலாம்.உங்களுக்கு கால்வலி ஏற்பட வாய்ப்புள்ளது. உடற்பயிற்சி மேற்கொள்வது நல்லது.




இன்றைய நாள் ஆக்கமுடைய நாளாக அமையும். சிறிய தொலை விலான பயணமும் மற்றும் சில மாற்றங்களின் காரணமாக உங்கள் தைரியத்தையும் உறுதியையும் நீங்கள் இழக்க நேரலாம்.

குறித்த நேரத்திற்குள் கொடுக்கப்பட்ட பணியை முடிப்பது சற்று கடினமாக இருக்கும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

உங்கள் மற்றும் உங்கள் துணையின் இடையே தொடர்பாடலில் இடைவெளி காணப்படும். இது உறவின் சீரமைப்பை கெடுக்கும். விஷயங்களை எளிதாக எடுத்துக் கொள்வது நல்லது.

நிதிநிலைமை சீராகவோ நல்ல முறையிலோ காணப்படாது. உங்கள் தேவைகளை பூர்த்தி செய்வது இயலாது.




உங்கள் மனதில் இருக்கும் குழப் பம் காரணமாக இன்று சிறிது அமைதி யின்மை காணப்படும். இது உங்கள் முடிவெடுக்கும் திறமையை பாதிக்கும்.

உங்கள் பணிகளை ஆற்றும் போது கவனம் தேவை. இல்லாவிடில் தவறுகள் நேர வாய்ப்புள்ளது. இது சிக்கலுக்கு வழி வகுக்கும்.

உங்கள் துணையுடன் தவறான புரிந்தணர்வு காணப்படும். இதனால் வாக்கு வாதங்கள் ஏற்படும். இத்தகைய சூழ்நிலையை தவிர்ப்பது நல்லது.

இன்று பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது. திட்டமிடலின்மை காரணமாக நீங்கள்சில பிரச்சினைகளை சந்திக்க நேரும். இன்று சுறுசுறுப்பாக இருக்க வேண்டியது அவசியம். இன்று உங்களால் சிறந்த ஆரோக்கியத்தை பராமரிக்க இயலாது.




இன்று சற்று அனுகூலமற்ற நாளாக இருக்கும். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க இயலாத நிலை இருக்கும். இன்று பொறுமை அவசியம். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்ளுங்கள்.

இன்று பணிகள் அதிகமாக காணப் படும். பணியிடச் சூழலில் சுமூகமான நிலை இருக்காது. சக பணியாளர்களுடனான தொடர்பில் சில பிரச்சினைகள் காணப்படும்.

இன்று முழுவதும் உங்கள் துணையுடன் அமைதியாக கட்டுப்பாட்டுடன் பழகுங்கள். தேவையற்ற பேச்சுக்களை தவிர்க்கும் வகையில் நாவடக்கம் மேற்கொள்ளுங்கள்.

இன்று பணப்பற்றாக்குறை காணப்படும். செலவுகள் அதிகமாக இருக்கும். உங்கள் தேவைகளுக்காக கடன் வாங்குவீர்கள்.




இன்று காணப்படும் சிறிய பிரச்சி னைகளை கையாள கடின முயற்சி தேவை .

பணி வளர்ச்சியைப் பொருத்தவரை இன்று உகந்த நாள் அல்ல. இன்று பணிச்சுமை காணப்படும். பணியை திட்டமிட்டு ஆற்ற வேண்டும்.

இன்று மோதல்கள் ஏற்பட வாய்ப்புள்ளதால் உங்கள் துணையுடன் உரையாடும் போது கவனம் தேவை. எந்த விஷயத்தையும் இலேசாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

நிதி சம்பந்தமான முக்கிய முடிவுகள் இன்று எடுப்பதை தவிர்க்கவும். பெரிய முதலீடுகள் முயற்சி இன்று ஏற்புடையதல்ல.

இன்று பல்வலி அல்லது செரிமானம் போன்ற பிரச்சினைகள் ஏற்படலாம்.




இன்று சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க நேரும். கடினமான சூழ்நிலைகளை சமாளிக்க மிகுந்த பொறுமை அவசியம். நம்பிக்கையுடன் செயல்பட்டால் பலன்கள் உங்களுக்கு சாதகமாக அமையும்.

இன்று அதிக பணிச்சுமைகள் காணப்படும். நீங்கள் திறமையுடன் பணியாற்ற உங்கள் பணிகளை திட்டமிட வேண்டும்.

உங்களின் அகந்தைப் போக்கு உங்கள் துணையுடனான பிணைப்பை பாதிக்கும். உங்கள் கடுமையான வார்த்தைகள் அவரை பாதிக்கும். உங்கள் பிரியமானவருடன் மகிழ்ச்சியாக இருக்க இதனை தவிர்த்தல் வேண்டும்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது. பண வரவிற்கான வாய்ப்பு குறைவு.




இன்று முன்னேற்றகரமான பலன் கள் காணப்படும். முன்னேற்றம் பெறு வதற்கான வலிமையையும் உற்சாக மும் உங்களிடம் காணப்படும். இன்று அனைத்து விதத்திலும் செழிப்பாக இருக்கும்.

புதிய வாய்ப்புகளால் உற்சாகமும் திருப்தியும் காணப்படும். உங்கள் பணிகளை மகிழ்வுடன் செய்வீர்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு செல்வீர்கள். இதனால் உங்கள் இருவருக்கும் இடையே நெருக்கம் அதிகரிக்கும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். ஸ்திரமான நிதிநிலை காணப்படும்.

மகிழ்ச்சியின் காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சீரும் சிறப்புமாக இருக்கும்.




இன்றைய நாள் முழுஅளவிலான அனுகூலத்தை அளிக்காது. பலன்கள் தாமதமாக கிடைக்கும். உங்கள அர்ப்பணிப்பும் நீங்கள் கையாளும் முறையும் உங்களுக்கு உதவிகரமாக இருக்கும்.

பணிகளை திட்டமிட்டு அதன்படி செயல்படுத்தினால் கடைசி நிமிட அல்லல்களை தவிர்க்கலாம். அதனால் பதட்டமின்றி காணப்படலாம்.

நீங்கள் உங்கள் கணவன் ஃ மனைவிக்கு உற்ற துணையாக இருங்கள். உங்கள் இனிமையான வார்த்தைகளால் உற்சாகப்படுத்துங்கள். இதனால் உறவு வலுப்படும்.

சாதாரணமாக செய்யும் செலவை விட இன்று அதிகமாக செலவு செய்வீர்கள்.என்றாலும் பணத்தை பயனுள்ள நோக்கத்திற்காக செலவு செய்வீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள்- 12.11.2025




இன்று உங்களுக்கு சிறப்பான நாள். உங்கள் அக்கம் பக்கத்தவரின் ஆதரவு கிடைக்கும். இன்று அனைத்தும் சிறப்பாக நடக்கும். இன்று நல்ல பலன்கள் கிடைக்கும்.

உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். அவர்கள் உங்களை பாராட்டுவார்கள். உங்கள் கடின உழைப்பு மற்றும் திறமை வெளிச்சத்திற்கு வரும்.

உங்கள் துணையுடன் விருந்து விசேஷங்களில் கலந்து கொள்ள வேண்டிய நேரம். இதில் நீங்கள் பங்கு கொண்டு மகிழ்வீர்கள். உங்கள் துணையிடம் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்வீர்கள்.

வெளி நாட்டிலிருந்து பணம் கிடைக்க வாய்ப்புள்ளது. உங்களுக்கு தேவைப் படும் பொழுது அந்தப் பணம் கிடைக்கும்.




உங்கள் மனதில் சில இலக்குகளை கொண்டிருப்பீர்கள். அவைகளை செயலாற்றுங்கள். அதனை எளிய வழியில் அடையலாம். பயணத்தின் மூலம் ஆதாயம் கிடைக்கும்.

பணியிடத்தில் உங்கள் திறமைகளை வெளிப்படுத்துவீர்கள். உங்கள் திறமைக்கு மேலதிகாரிகளின் பாராட்டு கிடைக்கும். பணிகளை உற்சாகமாக மேற்கொள்வீர்கள்.

நீங்கள் இருவரும் ஒருவரையொருவர் புரிந்து கொண்டதன் காரணமாக உங்கள் துணையுடன் நல்ல தொடர்பு கொண்டிருப்பீர்கள்.நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்கும். கூடுதல் ஊக்கத்தொகை மற்றும் சலுகைகள் கிடைக்கும்.இன்று உங்களிடம் அதிக ஆற்றலும் சுறுசுறுப்பும் காணப்படும்.




உங்களுக்கு பயன் தரும் வகையிலான சரியான முடிவுகளை இன்று உங்களால் எடுக்க இயலும். இன்று நன்மைகள் நடைபெறும் நாள்.

நீங்கள் உங்கள் பணிகளை ஆர்வத்துடனும் உறுதியுடனும் ஆற்றுவீர்கள். சுய முயற்சி காரணமாக நன்மை அடைவீர்கள். நீங்கள் இன்று உங்கள் துணையுடன் விருந்துகளில் கலந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும். மேலும் சமூக வட்டாரத்தில் கலந்து பழக முடியம்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். நிதிகளில் முதலீடு செய்வது இன்று பலனளிக்கும்.

உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்களிடம் இருக்கும் ஆற்றல் காணரமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




நீங்கள் உங்கள் ஆற்றல் மூலம் வெற்றி காண்பீர்கள். உங்கள் மனது தெளிவாக இருக்கும். எனவே உங்கள் செயல்களை சிறப்பாக ஆற்றுவீர்கள். உங்களின் உறுதி காரணமாக இன்றைய நாளை கழிப்பது உங்களுக்கு எளிதாக இருக்கும்.

புதிய வேலை வாய்ப்புகளால் நம்பிக்கையுடனும் புத்துணர்ச்சியுடனும் இருப்பீர்கள். உங்கள் பணிகளை விரைந்து மேற்கொள்வீர்கள்.

உங்கள் துணையிடம் அன்பு வயப்பட்ட நிலையில் இருப்பீர்கள். இதனால் உறவில் நல்லிணக்கம் ஏற்படும்.

இன்று உங்களிடம் போதிய பணம் காணப்படும். பணத்தைப் பொறுத்த வரை திருப்தியான நிலை இருக்கும். உங்களிடம் காணப்படும் தைரியம் காரணமாக இன்று நீங்கள் ஆரோக்கியமாக இருப்பீர்கள்.




# யாழில் உள்ளக விளையாட்டரங்கு; அமைச்சரவை அனுமதி வழங்கியது

யாழ். மாவட்டத்தில் உள்ளக விளையாட்டரங்கை நிர்மாணிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

வட மாகாணத்தின் விளையாட்டுக்களை ஊக்குவிப்பதற்காக விளையாட்டுக்கான உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வது முக்கியமானது என கண்டறியப்பட்டதையடுத்து விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சு சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

பாடசாலைகளிலும் விளையாட்டு கழகங்களிலும் மேசைப்பந்து, டென்னிஸ், பூப்பந்து, வலைப்பந்து மற்றும் சதுரங்கம் போன்ற உள்ளக விளையாட்டுக்களை ஊக்குவிக்கும் நோக்கில் இந்த திட்டம் முன்மொழியப்பட்டுள்ளது.

இதனையடுத்து 170 மில்லியன் ரூபா செலவில் யாழ். உள்ளக விளையாட்டரங்கு நிர்மாணிக்கப்படவுள்ளது.